# பள்ளிக்கல்வித்துறை

# விருதுநகர் மாவட்டம்

# பத்தாம் வகுப்பு

# தமிழ்

## மெல்லக்கற்போர் கையேடு

# 10

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM

மாணவச்செல்வங்களே...

**கொஞ்சமாகப் படியுங்கள்**

**அதிகமாக மதிப்பெண் பெறுங்கள்.**

**வாழ்த்துகிறோம்**

**திருமதி.அ.ஞானகௌரி,**எம்.எஸ்.சி.,பி.எட்.,எம்.பில்.,
முதன்மைக் கல்வி அலுவலர்,
விருதுநகர்.

**திருமதி.த.சு.மகாலட்சுமி,** எம்.எஸ்.சி.,பி.எட்.,எம்.பில்.,
மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக் கல்வி) விருதுநகர்.

**திரு.செ.இராஜா,** எம்.எஸ்.சி.,எம்.எட்.,எம்.பில்.,
மாவட்டக் கல்வி அலுவலர் [பொ] (இடைநிலைக் கல்வி) சிவகாசி.

**திருமதி.சி.பாண்டிச்செல்வி,** எம்.எஸ்.சி.,எம்.எட்.,
மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளி) விருதுநகர்.

---

ஒருங்கிணைப்பாளர்

**முனைவர்.மு.முனியாண்டி,** தலைமையாசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி, பாணாங்குளம்.

## தமிழாசிரியர்கள் குழு

**முனைவர்.த.இருளப்பன்,**
சிவந்திபட்டி நாடார் மேல்நிலைப்பள்ளி,
மம்சாபுரம்.

**திரு.அ.நாகராசன்,**
ஏ.கே.டி.ஆர்.ஆண்கள் மேல்நிலைப்பள்ளி
இராசபாளையம்.

**திரு.இரா.முத்துராம்,**
பி.ஏ.சி.எம் மேல்நிலைப்பள்ளி,
இராசபாளையம்.

**திரு.இரா.இளங்கோவன்,**
அரசு மேல்நிலைப்பள்ளி
அழகியநல்லூர்.

**திரு.மு.முத்துமுருகன்,**
அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி,
ம.ரெட்டியபட்டி.

**திரு. பெ.கார்த்திகைச்செல்வம்**
அ.ச.ப.சி.சி.நகராட்சி உயர்நிலைப்பள்ளி
விருதுநகர்.

**திரு. செ.பாலமுருகன்,**
அரசு மேல்நிலைப்பள்ளி
ஆவுடையாபுரம்.

## பொருளடக்கம்

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM


| வ.எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | பலவுள் தெரிக | 4 |
| 2 | நூலும் நூலாசிரியரும் | 9 |
| 3 | குறுவினா | 9 |
| 4 | திருக்குறள் | 16 |
| 5 | கலைச்சொல் அறிவோம் | 17 |
| 6 | மொழியை ஆள்வோம் மொழியோடு விளையாடு | 18 |
| 7 | சிறுவினா | 21 |
| 8 | மனப்பாடப்பாடல்கள் | 28 |
| 9 | அணிகள் | 29 |
| 10 | அலகிட்டு வாய்பாடு | 31 |
| 11 | செய்யுள் நெடுவினா | 31 |
| 12 | கடிதங்கள் | 34 |
| 13 | படிவங்கள் | 37 |
| 14 | நிற்க அதற்குத் தக | 39 |
| 15 | மொழிபெயர்ப்பு | 41 |
| 16 | நெடுவினா – 8 மதிப்பெண்கள் | 42 |

## பலவுள் தெரிக

**இயல் 1**

1.'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது ...........

***அ.வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்***

ஆ.பெரும் வணிகமும் பெரும் கலன்களும்

இ.ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்

ஈ.வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

2.'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது .............

அ.இலையும் சருகும் ஆ.தோகையும் சண்டும்

இ.தாளும் ஓலையும் ***ஈ.சருகும் சண்டும்***

3.எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் ........

அ.எந் + தமிழ் + நா ஆ.எந்த + தமிழ் + நா

***இ.எம் + தமிழ் + நா*** ஈ.எந்தம் + தமிழ் + நா

4.'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற் பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே .........

அ.பாடிய, கேட்டவர் ஆ.பாடல், பாடிய

இ.கேட்டவர், பாடிய ***ஈ.பாடல், கேட்டவர்***

5.வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை ........

அ.குலை வகை ***ஆ.மணி வகை***

இ.கொழுந்து வகை ஈ.இலை வகை

---

**இயல் 2**

1. உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்

உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம் –

பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை ?

அ. உருவகம், எதுகை ***ஆ. மோனை, எதுகை***

இ. முரண், இயைபு ஈ. உவமை, எதுகை.

2. செய்தி 1 – ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.

செய்தி 2 – காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.

செய்தி 3 – காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல் கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்.

அ. செய்தி 1 மட்டும் சரி ஆ. செய்தி 1, 2 ஆகியன சரி

இ. செய்தி 3 மட்டும் சரி ***ஈ. செய்தி 1, 3 ஆகியன சரி***

3. பாடுஇமிழ் பனிக்கடல் பருகி என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது ?

***அ. கடல் நீர் ஆவியாகி மேகமாதல்*** ஆ. கடல் நீர் குளிர்ச்சி அடைதல்

இ. கடல்நீர் ஒலித்தல் ஈ. கடல் நீர் கொந்தளித்தல்

4. <u>பெரிய மீசை</u> சிரித்தார் – வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது ?

அ. பண்புத்தொகை ஆ. உவமைத்தொகை

***<u>இ. அன்மொழித்தொகை</u>*** ஈ. உம்மைத்தொகை

5. பொருந்தும் விடைவரிசையைத் தேர்ந்தெடுக்க.

அ. கொண்டல் – 1.மேற்கு

ஆ. கோடை – 2.தெற்கு

இ. வாடை – 3.கிழக்கு

ஈ. தென்றல் – 4.வடக்கு

அ. 1,2,3,4 ***<u>ஆ. 3,1,4,2</u>*** இ. 4,3,2,1 ஈ. 3,4,1,2

---

## இயல் 3

1.பின்வருவனவற்றுள் முறையான தொடர் –

அ.தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.

ஆ.தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.

***<u>இ.தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.</u>***

ஈ.தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.

2.சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி என்னும் அடியில் பாக்கம் என்பது –

அ.புத்தூர் ஆ.மூதூர் இ.பேரூர் ***<u>ஈ.சிற்றூர்</u>***

3.அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது –

***<u>அ.வேற்றுமை உருபு</u>*** ஆ.எழுவாய் இ.உவமஉருபு ஈ.உரிச்சொல்

4.காசிக்காண்டம் என்பது –

அ.காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்

ஆ.காசி நகரத்தைக் குறிக்கும் மறு பெயர்

***<u>இ.காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்</u>***

ஈ.காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

5.விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணயம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு.

இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை –

அ.நிலத்திற்கேற்ற விருந்து ***<u>ஆ.இன்மையிலும் விருந்து</u>***

இ.அல்லிலும் விருந்து ஈ.உற்றாரின் விருந்து

---

## இயல் 4

1.உனதருளே பார்ப்பன் அடியேனே – யாரிடம் யார் கூறியது ?

அ.குலசேகராழ்வாரிடம் இறைவன்

***<u>ஆ.இறைவனிடம் குலசேகராழ்வார்</u>***

இ.மருத்துவரிடம் நோயாளி

ஈ.நோயாளியிடம் மருத்துவர்

2.தலைப்புக்கும் குறிப்புகளுக்கும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க

தலைப்பு – செயற்கை நுண்ணறிவு

குறிப்புகள் – கண்காணிப்புக் கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது.

திறன்பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காண்பிப்பது.

***அ.தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன***

ஆ.குறிப்புகளுக்குத் தொடர்பில்லாத தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது

இ.தலைப்புக்குத் தொடர்பில்லாத குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன

ஈ.குறிப்புகளுக்குப் பொருத்தமில்லாத தலைப்பு வழங்கப்பட்டுள்ளது

3.பரிபாடல் அடியில் விசும்பும் இசையும் என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது ?

அ.வானத்தையும் பாட்டையும் ஆ.வானத்தையும் புகழையும்

இ.வானத்தையும் பூமியையும் ***ஈ.வானத்தையும் பேரொலியையும்***

4.குலசேகர ஆழ்வார் வித்துவக்கோட்டம்மா என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால் சோற்றைக் கண்டதும் வருகிறார் – ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே .....

அ.மரபு வழுவமைதி, திணை வழுவமைதி

ஆ.இடவழுவமைதி, மரபு வழுவமைதி

***இ.பால் வழுவமைதி, திணை வழுவமைதி***

ஈ.காலவழுவமைதி, இட வழுவமைதி

5.பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது ?

அ.துலா ஆ.சீலா இ.குலா ***ஈ.இலா***

---

**இயல் 5**

1.மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்வைத்தும் என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி

***அ.சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது***

ஆ.காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

இ.பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

ஈ.சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

2.அருந்துணை என்பதைப் பிரித்தால் .......................

***அ.அருமை + துணை*** ஆ.அரு + துணை

இ.அருமை + இணை ஈ.அரு + இணை

3.இங்கு நகரப்பேருந்து நிற்குமா ? என்று வழிப்போக்கர் கேட்டது ............. வினா.

அதோ, அங்கே நிற்கும். என்று மற்றொருவர் கூறியது ..................... விடை.

அ.ஐயவினா, வினா எதிர் வினாதல்

ஆ.அறிவினா, மறை விடை

***இ.அறியா வினா, சுட்டு விடை***

ஈ.கொளல் வினா, இனமொழி விடை

4.அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி

மருளை அகற்றி மதிக்கும் தெருளை – என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது ?

அ.தமிழ் ஆ.அறிவியல் ***இ.கல்வி*** ஈ.இலக்கியம்

5.இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் .......... இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் .............

அ.அமைச்சர், மன்னன் ஆ.அமைச்சர், இறைவன்

இ.இறைவன், மன்னன் ***ஈ.மன்னன், இறைவன்***

**இயல் 6**

1.குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் .............

அ.முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள்

ஆ.குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

***இ.குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்***

ஈ.மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

2.ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர். இத்தொடரின் செயப்பாட்டு வினைத் தொடர் எது ?

அ.ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுவர்

ஆ.ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது

***இ.ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது***

ஈ.ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றனர்

3.மலர்கள் தரையில் நழுவும், எப்போது ?

அ.அள்ளி முகர்ந்தால் ***ஆ.தளரப் பிணைத்தால்***

இ.இறுக்கி முடிச்சிட்டால் ஈ.காம்பு முறிந்தால்

4.கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர்.

இத்தொடருக்கான வினா எது ?

அ.கரகாட்டம் என்றால் என்ன ?

ஆ.கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும் ?

இ.கரகாட்டத்தின் வேறுவேறு வடிவங்கள் யாவை ?

***ஈ.கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை ?***

5.கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன ?

அ.நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்

ஆ.ஊரில் விளைச்சல் இல்லாததால்

இ.அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்

***ஈ.அங்கு வறுமை இல்லாததால்***

---

**இயல் 7**

1.சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க.

அ.உழவு, மண், ஏர், மாடு ஆ.மண், மாடு, ஏர், உழவு

***இ.உழவு, ஏர், மண், மாடு*** ஈ.ஏர், உழவு, மாடு, மண்

2.மாலவன் குன்றம் போனாலென்ன ? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும் – மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே –

***அ.திருப்பதியும் திருத்தணியும்***

ஆ.திருத்தணியும் திருப்பதியும்

இ.திருப்பதியும் திருச்செந்தூரும்

ஈ.திருப்பரங்குன்றமும் பழனியும்

3.தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன் என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள் –

அ.மேம்பட்ட நிருவாகத் திறன் பெற்றவர்

ஆ.மிகுந்த செல்வம் உடையவர்

இ.பண்பட்ட மனிதநேயம் கொண்டவர்

***ஈ.நெறியோடு நின்று காவல் காப்பவர்***

4.இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ..........

அ.நாட்டைக் கைப்பற்றல் ஆ.ஆநிரை கவர்தல்

***இ.வலிமையை நிலைநாட்டல்*** ஈ.கோட்டையை முற்றுகையிடல்

5.தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது ....................

அ.திருக்குறள் ஆ.புறநானூறு

இ.கம்பராமாயணம் ***ஈ.சிலப்பதிகாரம்***

---

**இயல் 8**

1.மேன்மை தரும் அறம் என்பது ....................

***அ.கைமாறு கருதாமல் அறம் செய்வது***

ஆ.மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

இ.புகழ் கருதி அறம் செய்வது

ஈ.பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

2.வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல் – இவ்வடி குறிப்பிடுவது ................

அ.காலம் மாறுவதை ஆ.வீட்டைத் துடைப்பதை

***இ.இடையறாது அறப்பணி செய்தலை*** ஈ.வண்ணம் பூசுவதை

3.உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும்

பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப் படுவோர்

அ.உதியன், சேரலாதன் ***ஆ.அதியன், பெருஞ்சாத்தன்***

இ.பேகன், கிள்ளிவளவன் ஈ.நெடுஞ்செழியன், திருமுடிக்காரி

4.காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் .........................

***அ.இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது***

ஆ.என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது

இ.இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம்

ஈ.என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

5.சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ..................

***அ.அகவற்பா*** ஆ.வெண்பா

இ.வஞ்சிப்பா ஈ.கலிப்பா

---

**இயல் 9**

1.இவள் தலையில் எழுதியதோ

கற்காலம் தான் எப்போதும்... இவ்வடிகளில் கற்காலம் என்பது

அ.தலைவிதி ஆ.பழைய காலம்

இ.ஏழ்மை ***ஈ.தலையில் கல் சுமப்பது***

2.சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது

அ.அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல்

***ஆ.பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்***

இ.அறிவியல் முன்னேற்றம்

ஈ.வெளிநாட்டு முதலீடுகள்

3.பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று ..................................... வேண்டினார்.

***அ.கருணையன் எலிசபெத்துக்காக*** ஆ.எலிசபெத் தமக்காக

இ.கருணையன் பூக்களுக்காக ஈ.எலிசபெத் பூமிக்காக

4.வாய்மையே மழைநீராகி – இத்தொடரில் வெளிப்படும் அணி

அ.உவமை ஆ.தற்குறிப்பேற்றம்

***இ.உருவகம்*** ஈ.தீவகம்

5.கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் – இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது

அ.தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்

***ஆ.சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்***

இ.அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்

ஈ.அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

---

**நூலும் நூலாசிரியரும்**

| | | |
|---|---|---|
| 1. | கனிச்சாறு (அன்னை மொழியே) | – பாவலரேறு பெருஞ்சித்திரனார் |
| 2. | தனிப்பாடல் திரட்டு(இரட்டுறமொழிதல்) | – சந்தக்கவிமணி தமிழழகனார் |
| 3. | பாரதியார் கவிதைகள்(காற்றே வா) | – பாரதியார் |
| 4. | முல்லைப்பாட்டு | –நப்பூதனார் |
| 5. | காசிக் காண்டம் | –அதிவீரராம பாண்டியர் |
| 6. | மலைபடுகடாம் | – பெருங்கௌசிகனார் |
| 7. | பெருமாள் திருமொழி | – குலசேகர ஆழ்வார் |
| 8. | பரிபாடல் | –கீரந்தையார் |
| 9. | நீதி வெண்பா | –கா.ப. செய்குதம்பிப் பாவலர் |
| 10. | திருவிளையாடல் புராணம் | – பரஞ்சோதி முனிவர் |
| 11. | பூத்தொடுத்தல் | – உமா மகேஸ்வரி |
| 12. | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் | – குமரகுருபரர் |
| 13. | கம்பராமாயணம் | –கம்பர் |
| 14. | கு. ப. ரா. படைப்புகள் (ஏர் புதிதா?) | –கு.ப.ராஜகோபாலன் |
| 15. | மெய்க்கீர்த்தி | |
| 16. | சிலப்பதிகாரம் | –இளங்கோவடிகள் |
| 17. | கோடை வயல் (ஞானம்) | –தி.சொ. வேணுகோபாலன் |
| 18. | கண்ணதாசன் கவிதைகள் (காலக்கணிதம்) | – கண்ணதாசன் |
| 19. | சித்தாளு | –நாகூர் ரூமி |
| 20. | தேம்பாவணி | –வீரமாமுனிவர் |

---

**குறுவினா**

**இயல் 1** WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM

1.'வேங்கை' என்பதைத் தொடர் மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

· வேங்கை – வேங்கை மரம், புலி – தனி மொழி.

· வேம் + கை – வேகின்ற கை – தொடர்மொழி.

· தனிமொழிக்கும், தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைந்துள்ளதால் பொதுமொழி.

---

2. 'மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!

முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!' – இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள ஐம்பெருங்காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

*சீவகசிந்தாமணி,* · *வளையாபதி,* · *குண்டலகேசி.*

---

3. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.

ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.

ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.

மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.

<u>சரியான தொடர்கள்</u>

- ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
- ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.

<u>பிழையான தொடர்</u>· ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.

<u>பிழைக்கான காரணம்</u> தாற்றில் தான் பல சீப்பு வாழைப்பழங்கள் இருக்கும்.

---

4. 'உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்

வடுக்காண் வற்றாகும் கீழ்' – இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக.

<u>வகை</u>: இன்னிசை அளபெடை.

<u>இலக்கணம்:</u>

செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக குறில் எழுத்துகள் நெடில் எழுத்தாக அளபெடுப்பது.

---

5. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

மாலையில் மாலை வாங்கினேன்.

மாலை – பொழுது, மாலை – மலர் மாலை.

---

**<u>இயல் – 2</u>**

1. 'நமக்கு உயிர் காற்று

காற்றுக்கு வரம் மரம் –மரங்களை

வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்' –

இதுபோன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத்தொடர்களை எழுதுக.

1. சுத்தமான காற்றைச் சுவாசிக்க மரம் வேண்டும்.
2. மரம் இல்லையேல் காற்று இல்லை
   காற்று இல்லையேல் நாம் இல்லை

---

2. வசன கவிதை – குறிப்பு வரைக.

உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை

---

3.தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களை விரித்து எழுதுக; தொடரில் அமைக்க.

1. தண்ணீரைக் குடி –

அன்பு தண்ணீரைக் குடித்தான்.

2. தயிரை உடைய குடம் –

இனியா தயிரை உடைய குடத்தைத் தலையில் சுமந்து வந்தாள்.

---

4.பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும் போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.

1) தம்பி, அழாதே!
2) வா விளையாடலாம்.
3) உனக்குப் பிடித்ததை வாங்கித் தருகிறேன்.
4) உன்னை நான் பார்த்துக் கொள்கிறேன்.

---

5. மாஅல் – பொருளும் இலக்கணக் குறிப்பும் தருக.

மாஅல் – பொருள் – திருமால்

மாஅல் – இலக்கணக்குறிப்பு – செய்யுளிசை அளபெடை.

---

**இயல் – 3**

1.விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

வாங்க.

உட்காருங்க.

சாப்பிடுங்க.

நலமா.

---

2. 'தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குற்றியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி' என்பது இலக்கியச் செய்தி, விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.

விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்று இல்லை.

விருந்தோம்பலுக்கு மனம் மட்டும் இருந்தால் போதும்.

---

3. 'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது என்றாள்' என அடுக்குத்தொடரானது. 'சிரித்துப் பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத்தொடராகும்?

**'சிரித்துச் சிரித்துப் பேசினார்'**

---

4. 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' – இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும் தினைச்சோற்றையும் உணவாகப் பெறுவீர்கள்.

---

5.பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?

| | |
|---|---|
| பாரதியார் கவிஞர் | – பெயர்ப் பயனிலை |
| நூலகம் சென்றார் | – வினைப் பயனிலை |
| அவர் யார்? | – வினாப் பயனிலை. |

---

**இயல் – 3 –திருக்குறள்**

1. '**நச்சப் படாதவன்**' செல்வம் – இத்தொடரில் வண்ணமிட்ட சொல்லுக்குப் பொருள் தருக.

பொருள் –

---

பிறருக்கு உதவி செய்யாததால் ஒருவராலும் விரும்பப்படாதவன்.

2. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல் – இக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக.

கொடுப்பதூஉம், துய்ப்பதூஉம் – இன்னிசை அளபெடை

3. பொருளுக்கேற்ற அடியைப் பொருத்துக.

| | | |
|---|---|---|
| உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும் | – | ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை |
| ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது | – | உயிரின் ஓம்பப் படும் |
| ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர் | – | நடு ஊருள் நச்சு மரம் பழுத்தற்று |
| உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும் | – | உயிரின் ஓம்பப் படும் |
| ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது | – | நடு ஊருள் நச்சு மரம் பழுத்தற்று |
| ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர் | – | ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை |

4.எய்துவர் எய்தாப் பழி – இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?

அ. கூவிளம் தேமா மலர் ஆ. கூவிளம் புளிமா நாள்

இ. தேமா புளிமா காசு ஈ. புளிமா தேமா பிறப்பு

விடை: அ. கூவிளம் தேமா மலர்

**இயல் – 4**

1. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

செயற்கை நுண்ணறிவால் இயங்கும் ஊர்திகள்.

செயற்கை நுண்ணறிவால் இயங்கும் இயந்திர மனிதர்கள்.

2. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன் – இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?

ஆரல்வாய்மொழிக்குச் "செல்வேன்" என்று எதிர்காலத்தில் தான் வரவேண்டும்.

ஆனால் செல்வதன் உறுதித்தன்மை காரணமாக "செல்கிறேன்" என்று நிகழ்காலத்தில் வந்துள்ளது.

3.மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

மருத்துவரின் அன்பும் நோயாளியின் நம்பிக்கையும் நோயைக் குணப்படுத்துகிறது.

4. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல்வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

பூமி குளிர மழை பெய்தது.

தொடர் மழையால், மீண்டும் மீண்டும் உருவான தொடர் வெள்ளத்தால், உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் உருவானது.

5. "சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்க மாட்டான்" என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார்

– இதில் உள்ள திணை வழுக்களைத் திருத்தி எழுதுக.

"சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் **கேட்கும்**.

புதியவர்களைப் பார்த்துக் **குரைக்குமே** தவிர **கடிக்காது**."

**இயல் – 5**

1. "கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால் பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென்சொல்" – இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல்மிகு கேண்மையினான் யார்?

கழிந்த பெரும் கேள்வியினான் – குலேசபாண்டியன்.

காதல்மிகு கேண்மையினான் – இடைக்காடனார்.

---

2.செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

"துணையே துணையே கல்வி துணையே"

"பெருக்கு பெருக்கு அருளைப் பெருக்கு"

---

3.அமர்ந்தான் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அமர்ந்தான் – அமர் + த்(ந்) + த் + ஆன்

அமர் – பகுதி

த் – சந்தி – ந் ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

---

4. இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது? இதோ... இருக்கிறதே சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா?

மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.

மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் உள்ளது? – **அறியா வினா**

மின்சாரம் இருக்கிறதா, இல்லையா? – **ஐயவினா**

---

**இயல் – 6**

1.காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும்.

இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.

முதற்பொருள் :

நிலம் – காடு

சிறுபொழுது – மாலை

பெரும்பொழுது – கார்காலம் (மழைக்காலம்)

கருப்பொருள் :

உணவு – வரகு

---

2. "நேற்று நான் பார்த்த அருச்சுனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையையும் சிறந்த நடிப்பையும் இனிய பாடல்களையும் நுகர்ந்து மிக மகிழ்ந்தேன்!" என்று சேகர் என்னிடம் கூறினான். இக்கூற்றை அயற்கூற்றாக எழுதுக.

முந்தின நாள் தான் பார்த்த அருச்சுனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையையும் சிறந்த நடிப்பையும் இனிய பாடல்களையும் நுகர்ந்து மிக மகிழ்ந்ததாகச் சேகர் என்னிடம் கூறினான்.

---

3.உறங்குகின்ற கும்பகன்ன 'எழுந்திராய் எழுந்திராய்'

காலதூதர் கையிலே 'உறங்குவாய் உறங்குவாய்'

கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?

பொய்யான மாய வாழ்க்கை எல்லாம் வீழ்ச்சி அடையத் தொடங்குகிறதைக் காண எழுந்திருப்பாயாக

"காற்றாடி வில்லைப் பிடித்து எமதூதர்களின் கையில் கிடந்து நிரந்தரமாக உறங்குவாயாக".

---

4. சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்
சுமக்கின்றன ஒல்லித்தண்டுகள்

– இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.

மென்மையான அன்பே பெரிய உலகத்தைத் தாங்குகின்றது.

---

5. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.

உழவர்கள் மலையில் உழுதனர்.

முல்லைப் பூச்செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

**குறவர்கள்** மலையில் **தேனெடுத்தனர்**.

**நெய்தல்** பூச்செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

---

**இயல் 6 – திருக்குறள்**

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM

1.'கரப்பிடும்பை இல்லார்' இத்தொடரின் பொருள் கூறுக.

கரப்பிடும்பை இல்லார் :

'தம்மிடமுள்ள பொருளை மறைத்து வைத்தல் என்னும் துன்பத்தைத் தராத நல்லார்'.

---

2. தஞ்சம் எளியர் பகைக்கு – இவ்வடிக்குரிய அசைகளையும் வாய்பாடுகளையும் எழுதுக.

| | | |
|---|---|---|
| தஞ்/சம் | – நேர் நேர் | – தேமா |
| எளி/யர் | – நிரை நேர் | – புளிமா |
| பகைக்/கு | – நிரைபு | – பிறப்பு |

---

3. வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளி நகையாடுவது குறித்துக் குறளின் கருத்து என்ன?

இகழ்ந்து ஏளனம் செய்யாமல் பொருள் கொடுப்பவரைக் கண்டால், இரப்பவரின் உள்ளத்தின் உள்ளே மகிழ்ச்சி பொங்கும்.

---

4. பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார்? ஏன் என்பதை எழுதுக.

பெரிய கத்தி, இரும்பு, ஈட்டி, உழைத்ததால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்.

அ). செந்நாப்போதார், உழைத்ததால் கிடைத்த ஊதியத்தைக் கூரான ஆயுதம் என்கிறார்.

ஆ). ஏனெனில், உழைத்ததால் கிடைத்த ஊதியமே, பகைவரை வெல்லும் கூர்மையான ஆயுதமாகும்.

---

**இயல் 7**

1.பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் – சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

| | | |
|---|---|---|
| பாசவர் | – | வெற்றிலை விற்போர். |
| வாசவர் | – | நறுமணப்பொருள்கள் விற்பவர். |
| பல்நிண விலைஞர் | – | பல்வகை இறைச்சி விற்பவர். |

உமணர் – வெண்மையான உப்பு விற்பவர்.

2. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது ?

அரசர்கள் தங்கள் வரலாறும் பெருமையும் காலம் கடந்தும் நிலைக்க விரும்பினார்கள்.

அழியாத வகையில் இருப்பதற்காகவே மெய்க்கீர்த்தி பாடப்பட்டது.

3. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்குச் சான்று தருக.

உணவுக்காக வைத்திருக்கும் பணத்தில் புத்தகங்களை வாங்கி விட்டு, பல வேளைகளில் பட்டினி கிடந்திருக்கிறார்.

4. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

வெட்சி – கரந்தை

வஞ்சி – காஞ்சி

நொச்சி – உழிஞை

தும்பை – வாகை

5. பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறியிடுக.

பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக்கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன் – ம.பொ.சி.

பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக்கூறி, சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி, நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி, விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன். – ம.பொ.சி.

**இயல் – 8**

1. "கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!

உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது"

அ . அடியெதுகையை எடுத்தெழுதுக

ஆ . இலக்கணக் குறிப்பு எழுதுக – கொள்க, குரைக்க.

அ. அடியெதுகை :

கொ<u>ள்</u>வோர் – உ<u>ள்</u>வாய்

ஆ. இலக்கணக் குறிப்பு :

கொள்க, குரைக்க –

**வியங்கோள்வினைமுற்று**.

2. குறள்வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக.

வெண்பாவின் பொது இலக்கணம் அமையப்பெற்று இரண்டு அடிகளாய் வரும்.

எ.கா – முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை

இன்மை புகுத்தி விடும்

3. குறிப்பு வரைக – அவையம்.

அறம் கூறும் மன்றங்களே அவையம் எனப்பட்டது.

இவை அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணை புரிந்தன.

4. காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?

கையிலே வாளித் தண்ணீர், சாயக்குவளை, கந்தைத் துணி, கட்டைத்தூரிகை கொண்டு சுத்தம் செய்யும் பணியை ஓய்வின்றிச் செய்கிறார்.

---

5. வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசை ஆகும். துள்ளல் ஓசை கலிப்பாவுக்கு உரியது.

இத்தொடர்களை ஒரே தொடராக இணைத்து எழுதுக.

வஞ்சிப்பாவிற்குத் தூங்கல் ஓசையும் கலிப்பாவுக்குத் துள்ளல் ஓசையும் உரியன.

---

**இயல் – 9**

1. தீவக அணியின் வகைகள் யாவை?

தீவக அணி மூன்று வகைப்படும். அவை

முதல் நிலைத் தீவகம்,

இடைநிலைத் தீவகம்,

கடைநிலைத் தீவகம்.

---

2. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு

– இத்தொடரை இரு தொடர்களாக்குக.

நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதல் உண்டு.

நான் எழுதுவதற்கு ஒரு காரணம் உண்டு.

---

3. "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்" – உவமை உணர்த்தும் கருத்து யாது?

இளம் பயிர் நெல்மணிகளைக் காணும் முன்னே மழைத்துளி இல்லாமல் வாடி விட்டதைப்போல, நானும் இப்போது என் தாயை இழந்து வாடுகின்றேனே.

---

4. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது

– இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?

**நிரல்நிறை அணி**.

சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது.

---

5. 'வாழ்வில் தலைக்கனம்', 'தலைக்கனமே வாழ்வு' என்று நாகூர்ரூமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்?

'வாழ்வில் தலைக்கனம்'– பணம், பதவிகளால் தலைக்கனம் பிடித்தவர்.

'தலைக்கனமே வாழ்வு' – செங்கற்களைச் சுமந்து வேலை செய்யும் சித்தாளுக்குத் தலைக்கனமே வாழ்வாகிப் போனது.

---

**<u>திருக்குறள்</u>**

1.**<u>எப்பொருள்</u>** எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப ***<u>தறிவு</u>***.

2.**<u>பல்லார்</u>** பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை ***<u>விடல்</u>***.

3.**<u>பண்என்னாம்</u>** பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத ***<u>கண்</u>***.

4.**<u>அருமை</u>** உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி ***<u>தரும்</u>***.
5.**<u>முயற்சி</u>** திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி ***<u>விடும்</u>***.
6.**<u>செயற்கை</u>** அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து ***<u>செயல்</u>***.
7.**<u>பொருளல்</u>** லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை ***<u>பொருள்</u>***.
8.**<u>குன்றேறி</u>** யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் ***<u>வினை</u>***.
9.**<u>குற்றம்</u>** இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் ***<u>உலகு</u>***.
10.**<u>இன்மையின்</u>** இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா ***<u>தது</u>***. – ***திருவள்ளுவர்***

---

## கலைச்சொல் அறிவோம்

**<u>இயல் 1</u>**

1.Vowel – உயிரெழுத்து
2.Consonant – மெய்யெழுத்து
3.Homograph – ஒப்பெழுத்து
4.Monolingual – ஒருமொழி
5.Conversation– உரையாடல்
6.Discussion – கலந்துரையாடல்

**<u>இயல் 2</u>**

7.Storm – புயல்
8.Tornado – சூறாவளி
9.Tempest – பெருங்காற்று
10.Land Breeze – நிலக்காற்று
11.Sea Breeze – கடற்காற்று
12.Whirlwind – சுழல்காற்று

**<u>இயல் 3</u>**

13.Classical literature–செவ்விலக்கியம்
14.Epic literature–காப்பிய இலக்கியம்
15.Devotional literature–பக்தி இலக்கியம்
16.Ancient literature–பண்டைய இலக்கியம்
17.Regional literature–வட்டார இலக்கியம்
18.Folk literature–நாட்டுப்புற இலக்கியம்
19.Modern literature–நவீன இலக்கியம்

**<u>இயல் 4</u>**

20.Nanotechnology –மீநுண்தொழில்நுட்பம்
21.Biotechnology –உயிரித் தொழில்நுட்பம்
22.Ultraviolet rays –புற ஊதாக் கதிர்கள்
23.Space Technology–விண்வெளித் தொழில்நுட்பம்
24.Cosmic rays–விண்வெளிக் கதிர்கள்
25.Infrared rays–அகச்சிவப்புக் கதிர்கள்

**<u>இயல் 5</u>**

26.Emblem – சின்னம்
27.Thesis – ஆய்வேடு
28.Intellectual – அறிவாளர்
29.Symbolism – குறியீட்டியல்

**<u>இயல் 6</u>**

30.Aesthetics –அழகியல், முருகியல்
31.Artifacts –கலைப்படைப்புகள்
32.Terminology – கலைச்சொல்
33.Myth – தொன்மம்

**இயல் 7**

| | | | |
|---|---|---|---|
| 34.Consulate | – துணைத்தூதரகம் | 37.Guild | – வணிகக் குழு |
| 35.Patent | – காப்புரிமை | 38.Irrigation | – பாசனம் |
| 36.Document | – ஆவணம் | 39.Territory | – நிலப்பகுதி |

**இயல் 8**

| | | | |
|---|---|---|---|
| 40.Belief | – நம்பிக்கை | 42.Philosopher | – மெய்யியலாளர் |
| 41.Renaissance | – மறுமலர்ச்சி | 43.Revivalism | – மீட்டுருவாக்கம் |

**இயல் 9**

| | | | |
|---|---|---|---|
| 44.Humanism | – மனிதநேயம் | 46.Cultural Boundaries | – பண்பாட்டு எல்லை |
| 45.Cabinet | – அமைச்சரவை | 47.Cultural values | – பண்பாட்டு விழுமியங்கள் |

## மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு

**சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.**

"தேணிலே ஊரிய செந்தமிழின் – சுவை
தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் – நிதம்
ஓதி யுனர்ந்தின் புருவோமே"

- கவிமணி தேசிக விநாயகனார்.

"தே**னி**லே ஊ**றி**ய செந்தமிழின் – சுவை
தேரும் சிலப்பதி கா**ர**மதை
ஊனிலே எம்முயிர் உ**ள்ளள**வும் – நிதம்
ஓதி யு**ண**ர்ந்தின் பு**று**வோமே"

– கவிமணி தேசிக விநாயகனார்.

---

**வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.**

1.கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.
கலையரங்கத்தில் எனக்காகக் **காத்திருக்கிறவரை** அழைத்து வாருங்கள்.

2.ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
ஊட்டமிகு உணவு **உண்டவர்** நீண்ட வாழ்நாள் பெற்றார்.

3.நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.
நேற்று என்னைச் **சந்தித்தவர்** என் நண்பர்.

4.பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.
பொது அறிவு நூல்களைத் தேடிப் **படித்தவர்** போட்டித் தேர்வில் வென்றார்.

---

**சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க.**

முதல் இரண்டை நீக்கினாலும் வாசனை தரும் நீக்காவிட்டாலும் வாசனை தரும். – **நறுமணம்**.

பழமைக்கு எதிரானது – எழுதுகோலில் பயன்படும் – **புதுமை**.

இருக்கும்போது உருவமில்லை – இல்லாமல் உயிரினம் இல்லை – **காற்று**.
நாலெழுத்தில் கண்சிமிட்டும் – கடையிரண்டில் நீந்திச் செல்லும் – **விண்மீன்**.
ஓரெழுத்தில் சோலை – இரண்டெழுத்தில் வனம் – **காடு**

---

**பழமொழிகளை நிறைவு செய்க .**

1. உப்பில்லாப் **பண்டம் குப்பையிலே**
2. ஒரு பானை **சோற்றுக்கு ஒரு சோறு பதம்**
3. உப்பிட்டவரை **உள்ளளவும் நினை**
4. விருந்தும் **மருந்தும் மூன்று நாளைக்கு**
5. அளவுக்கு **மிஞ்சினால் அமுதமும் நஞ்சு**

---

**தொடர்களை அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.**

எ.கா.

அழைப்புமணி ஒலித்தது, கயல்விழி கதவைத் திறந்தார்.

(தனிச்சொற்றொடர்களைக் கலவைச் சொற்றொடராக மாற்றுக)

அழைப்புமணி ஒலித்ததால், கயல்விழி கதவைத் திறந்தார்.

1.இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்கங்களில் அடுக்கிவைத்தார். புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார்.

(தொடர் சொற்றொடராக மாற்றுக)

இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தினார்; அடுக்கங்களில் அடுக்கிவைத்தார்; கேட்டவர்களுக்கு எடுத்துக்கொடுத்தார்.

2.ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசுபோலக் கட்டிக்கொண்டு, காலில் சலங்கை அணிந்துகொண்டு, கையில் ஒரு சிறுதுணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர்.

(தனிச் சொற்றொடர்களாக மாற்றுக)

ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசுபோலக் கட்டிக்கொள்வர். ஒயிலாட்டத்தில் குழுவினர் காலில் சலங்கை அணிந்து கொள்வர். ஒயிலாட்டத்தில் குழுவினர் கையில் ஒரு சிறுதுணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர்.

3.கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர். (கலவைச் சொற்றொடராக மாற்றுக)

கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கியதால் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.

4.ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது.

(தனிச் சொற்றொடர்களாக மாற்றுக)

ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றது. அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது.

---

**இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக .**

| | |
|---|---|
| சிலை – சீலை | சிலையைத் திரைச்சீலையால் மறை . |
| தொடு – தோடு | தொடு என்று தோடு ஒன்றை நீட்டினாள் . |
| மடு – மாடு | மடுவில் மாடு மேய்த்துக் கொண்டிருந்தான் . |

| | |
|---|---|
| மலை – மாலை | <u>மலை</u>யைச் சுற்றி <u>மாலை</u> நேரத்தில் நட . |
| வளி – வாளி | <u>வளி</u> வீசியதால் <u>வாளி</u> கீழே விழுந்தது . |
| விடு – வீடு | என்னை <u>விடு</u> என்று கூறி <u>வீடு</u> சென்றான். |

---

**<u>கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.</u>**

அ. இயற்கை – செயற்கை

<u>இயற்கைக்</u> காடுகளில் செல்ல <u>செயற்கைக்</u> கருவிகள் தேவை .

ஆ.கொடு – கோடு

அளவுகோலைக் <u>கொடு</u> என்று வாங்கி ஒரு <u>கோடு</u> போட்டான் .

இ.கொள் – கோள்

வைத்துக் <u>கொள்</u> என்று பூமிக் <u>கோள்</u> மாதிரியைத் தந்தாள் .

ஈ.சிறு – சீறு

<u>சிறு</u> பாம்பும் மனிதர்களைப் பார்த்துச் <u>சீறு</u>ம் .

உ.தான் – தாம்

<u>தான்</u> என்பது நீங்கி <u>தாம்</u> என்பது வர வேண்டும்.

ஊ.விதி – வீதி

<u>விதி</u>யை மாற்ற இயலாது என்று <u>வீதி</u>யில் விழுந்தவர் கூறினார்.

---

**<u>மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக .</u>**

<u>மனக்கோட்டை –</u>

ஒரே நாளில் மிகப் பெரிய பணக்காரனாக மாறியது போல **<u>மனக்கோட்டை</u>** கட்டினான் .

<u>கண்ணும் கருத்தும் –</u>

ஒரு வேலையை **<u>கண்ணும் கருத்துமாகச்</u>** செய்ய வேண்டும் .

<u>அள்ளி இறைத்தல் –</u>

பணத்தை **<u>அள்ளி இறைத்ததால்</u>** வறுமையில் சிக்கினான்.

<u>ஆறப்போடுதல் –</u>

கோபமாக இருக்கும் பொழுது முடிவெடுக்காமல் **<u>ஆறப்போடுதல்</u>** நன்று .

---

**<u>உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக .</u>**

1.தாமரை இலை நீர் போல –

சில உறவுகளைத் **<u>தாமரை இலை நீர் போல</u>** வைத்துக் கொள்ள வேண்டும்.

2.மழைமுகம் காணாப் பயிர்போல –

தாயைக் காணாத குழந்தை **<u>மழைமுகம் காணாப் பயிர்போல</u>** எதிர்பார்த்துக் காத்திருந்தது .

3.கண்ணினைக் காக்கும் இமை போல –

பெற்றோர் தன் குழந்தைகளைக் **<u>கண்ணினைக் காக்கும் இமை போலக்</u>** காத்தனர்.

4.சிலை மேல் எழுத்து போல –

கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதில் **<u>சிலைமேல் எழுத்து போல</u>** உறுதியாக இருக்க வேண்டும் .

---

**சொற்களைப் பிரித்துப் பார்த்துப் பொருள் தருக .**

1.கானடை

கான் அடை – காட்டைச் சேர்

கான் நடை – காட்டுக்கு நடத்தல்

கால் நடை – காலால் நடத்தல்

இவ்வாறு மூன்று வகையாகப் பிரித்துப் பொருள் கூறலாம் .

2.வருந்தாமரை

வரும் தாமரை – வருகின்ற தாமரை

வருந்தா மரை – வருத்தப்படாத மான்

3.பிண்ணாக்கு

பின் நாக்கு – நாக்கின் பின்புறம்

பிள் நாக்கு – பிளவுபட்ட நாக்கு

4.பலகையொலி

பலகை ஒலி – பலகையின் சத்தம்

பல கை ஒலி – பல கைகளின் சத்தம்

---

**ஊர்ப்பெயர்களின் மரூஉ வை எழுதுக .**

| | |
|---|---|
| தஞ்சாவூர் – **தஞ்சை** | புதுக்கோட்டை –**புதுகை** |
| திருச்சிராப்பள்ளி –**திருச்சி** | உதகமண்டலம் –**உதகை** |
| கோயம்புத்தூர் –**கோவை** | நாகப்பட்டினம் –**நாகை** |
| புதுச்சேரி –**புதுவை** | கும்பகோணம் –**குடந்தை** |
| திருநெல்வேலி –**நெல்லை** | மன்னார்குடி –**மன்னை** |
| மயிலாப்பூர் –**மயிலை** | சைதாப்பேட்டை –**சைதை**. |

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM

## சிறுவினா

**இயல் 1**

1.தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

1) பழமைக்கும் பழமையானது.
2) புதுமைக்கும் புதுமையானது.
3) குமரிக்கண்டத்தில் அரசாண்டது.
4) பாண்டியன் மகளாய்ப் பிறந்தது.
5) சங்க இலக்கியமாய் விளங்குவது.
6) திருக்குறளின் பெருமையாய் இருப்பது.

---

2.'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.'

இதுபோல் இளம்பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

1) நெல் நாற்று நன்றாக வளர்ந்துள்ளது.
2) தென்னம் பிள்ளைக்குத் தண்ணீர் விட்டேன்.
3) மாங்கன்று தளிர்விட்டது.
4) வாழைக்குருத்து வாடியது.

5) பனைவடலி பசுமையாக இருந்தது.

3.'**அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது'** இவை அனைத்தையும் யாம் அறிவோம். அதுபற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும். இக்கூற்றில் வண்ண எழுத்துகளில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.

| வினைமுற்று | – | **தொழிற்பெயர்** |
|---|---|---|
| அறிந்தது | – | **அறிதல்** |
| அறியாதது | – | **அறியாமை** |
| புரிந்தது | – | **புரிதல்** |
| புரியாதது | – | **புரியாமை** |
| தெரிந்தது | – | **தெரிதல்** |
| தெரியாதது | – | **தெரியாமை** |
| பிறந்தது | – | **பிறத்தல்** |
| பிறவாதது | – | **பிறவாமை** |

4.தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

1) தமிழ் **முத்தமிழாய்** வளர்ந்தது.
2) கடல் **முத்தினையும் அமிழ்தினையும்** தருகிறது.
3) தமிழ் **முச்சங்கங்களால்** வளர்க்கப்பட்டது.
4) கடல் **மூவகைச் சங்குகளைத்** தருகின்றது.
5) தமிழ் ஐம்பெருங்காப்பியங்களை **அணிகலன்களாய்ப்** பெற்றது.
6) கடல் மிகுதியான **வணிகக் கப்பல்கள்** செல்லும்படி இருக்கிறது.

## இயல் 2

1.சோலைக்(பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்க.

சோலைப்பூங்காற்று, மின்விசிறிக்காற்று உரையாடல்

சோலைக்காற்று : இயற்கையானவன் நான்

மின்விசிறிக் காற்று : செயற்கையானவன் நான்.

சோலைக்காற்று : தேடி வருபவர்களுக்குத் தென்றலாய் வீசுகிறேன்.

மின்விசிறிக் காற்று : நாடி வருபவர்களுக்கு நயமாக வீசுகிறேன்.

சோலைக்காற்று : விடுதலைப் பறவையாய் உலா வருகிறேன்.

மின்விசிறிக் காற்று : சிறைப்பறவையாய் சிக்குண்டு இருக்கிறேன்.

2.தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள்.

இப்பத்தியில் உள்ள தொகை நிலைத் தொடர்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விரித்து எழுதுக.

1) பூப்பறித்த – இரண்டாம் வேற்றுமைத்தொகை – பூ(ஐ)வைப் பறித்த.
2) பூங்கொடி – உவமைத்தொகை – பூப்போன்ற கொடி.

3) ஆடுமாடுகள் – உம்மைத்தொகை – ஆடுகளும் மாடுகளும்.

4) மணி பார்த்தாள் – இரண்டாம் வேற்றுமைத்தொகை – மணியைப் பார்த்தாள்.

---

## இயல் 3

1. 'கண்ணே கண்ணுறங்கு!

காலையில் நீயெழும்பு!

மாமழை பெய்கையிலே

மாம்பூவே கண்ணுறங்கு!

பாடினேன் தாலாட்டு!

ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!' – இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

1) கண்ணே கண்ணுறங்கு – விளித்தொடர்
2) மாம்பூவே கண்ணுறங்கு – விளித்தொடர்
3) ஆடி ஆடி – அடுக்குத்தொடர்

---

2. முல்லை நிலத்திலிருந்தும் மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருள்கள் யாவை?

முல்லை நிலத்தில் கிடைக்கும் உணவுப் பொருள்கள்

*வரகு, சாமை, பால் மற்றும் பால் பொருள்கள்.*

மருத நிலத்திலிருந்து கிடைக்கும் உணவுப் பொருள்கள்

*செந்நெல், வெண்ணெல்*

---

3.கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலை கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

1. இளைப்பாறிச் செல்லுங்கள்
2. நன்னனின் கூத்தர்கள் என்று சொல்லுங்கள்.
3. உரிமையுடன் நுழையுங்கள்.
4. மாமிசத்தின் பொரியலையும் தினைச் சோற்றையும் பெறுவீர்கள்.

---

## இயல் 3 – திருக்குறள்

1.வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்

கோலொடு நின்றான் இரவு

– குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

1. உவமை, பொருள், உவம உருபு வருவது உவமை அணி.
2. உவமை: வேலொடு நின்றான் இடுவென்றது
3. பொருள்: கோலொடு நின்றான் இரவு
4. உவம உருபு: போலும்.

---

## இயல் 4

1.மாளாத காதல் நோயாளன் போல் என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

மாளாத காதல் நோயாளன் போல் என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தி –

அடித்தாலும் அன்னையின் கை பிடித்து அழும் குழந்தை போல,

---

இறைவன் தமக்குத்தரும் துன்பமும் நன்மைக்கே எனக் கருதி இறைவனிடம் பற்றுக் கொள்வதாகக் குலசேகராழ்வார் கூறியுள்ளார்.

---

2.இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

1. மொழிபெயர்ப்பு, இசையமைப்பு, மகிழுந்து ஓட்டுதல் முதலியவற்றைச் செய்ய.
2. கட்டுரை எழுதும் மென்பொருள்கள், கவிதை பாடும் எந்திரங்கள், ஆள்கள் இல்லாமலே நடத்தப்படும் வணிகக் கடைகள்.
3. மூளைக்கு இணையாகத் தொழில்நுட்பம்.

---

3.நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது; தந்தை என்னிடம், "இலச்சுமி கூப்பிடுகிறாள், போய்ப் பார்" என்றார். "இதோ சென்றுவிட்டேன்" என்றவாறே அங்குச் சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக்கொடுத்து, "என்னடா விளையாட வேண்டுமா?" என்று கேட்டு அவனை அவிழ்த்துவிட்டேன். என் தங்கை அங்கே வந்தாள். அவளிடம் "நீயும் இவனும் விளையாடுங்கள்" என்று கூறினேன். அவிழ்த்துவிடப்பட்ட இலச்சுமி தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள்.

இப்பத்தியிலுள்ள வழுவமைதிகளைப் பட்டியலிட்டு எழுதுக.

| | |
|---|---|
| வாழைத்தோப்பில் | **வாழைத்தோட்டத்தில்** |
| குட்டியுடன் நின்றிருந்த மாடு | **கன்று** |
| இலச்சுமி கூப்பிடுகிறாள் | **பசு கத்துகிறது** |
| இதோ சென்றுவிட்டேன் | **இதோ செல்கிறேன்** |
| துள்ளிய குட்டியை | **துள்ளிய கன்றை** |
| அவனை அவிழ்த்துவிட்டேன் | **அதனை** |
| நீயும் இவனும் விளையாடுங்கள் | **இதுவும்** |
| நீரைக் குடித்தாள் | **குடித்தது** |

---

## இயல் 5

1.மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.

1. குலேச பாண்டியன் இடைக்காடனார் கவிதையை அவமதித்தான்.
2. இடைக்காடனார் இறைவனிடம் முறையிட்டார்.
3. இறைவன் கடம்பவனக் கோவிலை விட்டு நீங்கினார்.
4. மன்னன் இடைக் காடனாருக்குச் சிறப்புச் செய்தான்.
5. இறைவன் கோவிலுக்குத் திரும்பினார்.

---

2.முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

பொருள்கோள் வகை – **ஆற்றுநீர்ப் பொருள்கோள்**

இக்குறட்பாவில் முயற்சி செல்வத்தை உண்டாக்கும், முயற்சியின்மை வறுமைக்குள் தள்ளிவிடும் என்று நேரிடையாக ஆற்றின் நீரோட்டத்தைப்போல் பொருள் கொள்ள முடிகிறது.

---

**இயல் 6**

1.வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக .

1. திருவடிகளில் கிண்கிணிகளோடு சிலம்புகளும் ஆடுகின்றன.
2. இடையில் அரைஞாண் மணியோடு அரைவடங்கள் ஆடுகின்றன.
3. தொந்தியுடன் சிறு வயிறும் சரிந்து ஆடுகின்றன.
4. நெற்றியில் பொட்டுடன் சுட்டியும் அசைந்தாடுகின்றன.
5. உச்சிக் கொண்டையும் முத்துகளோடு ஆடுகின்றன.

**இயல் 6 – திருக்குறள்**

1.வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள் வழி விளக்குக.

வள்ளுவம் கூறும் சிறந்த அமைச்சருக்குரிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்தும் விதம்

1. தேவையான கருவி, அதற்கு ஏற்ற காலம், செயலின் தன்மை, செய்யும் முறை ஆகியவற்றை அறிந்து அரிய செயலைச் செய்பவரே அமைச்சர் ஆவார்.
2. இது பல்வேறு பணிகளுக்கும் பொருந்தும்.
3. மனவலிமை, குடிகாத்தல், ஆட்சிமுறைகளைக் கற்றல், நூல்களைக் கற்றல், விடாமுயற்சி ஆகிய ஐந்தும் சிறப்பாக அமைந்தவரே அமைச்சராவார்.
4. இவ்வைந்தும் பெற்றவர் சிறந்த குடும்பத்தலைவராக வாழ முடியும்.

2.பலரிடம் உதவி பெற்றுக் கடின உழைப்பால் முன்னேறிய ஒருவர், அவருக்கு உதவிய நல்ல உள்ளங்களையும் சுற்றங்களையும் அருகில் சேர்க்கவில்லை.
அவருக்கு உணர்த்தும் நோக்கில் வள்ளுவர் குறிப்பிடும் கருத்துகள் யாவை ?

தம் நல்வாழ்வுக்கு உதவிய நல்ல உள்ளங்களையும் சுற்றங்களையும் அண்டாது வாழும் ஒருவற்கு வள்ளுவர் கூறும் கருத்துகள் –

1. உறவினர் இல்லாதவரால் பகைவரின் வலிமையை எதிர்கொள்ள இயலாது.
2. தம்மிடம் உள்ள பொருளை மறைத்து வைத்தல் என்னும் துன்பம் தராத நல்லாரைக் காணின் வறுமையின் கொடுமை முழுதும் கெடும்.

**இயல் 7**

1)முதல் மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவி பாடுகிறார் ?

முதல் மழை விழுந்ததும், மேல்மண் பதம் ஆகி விட்டது, அதிகாலை வெள்ளி முளைத்துவிட்டது;

மாட்டை எழுப்பி, கொழுவைப் பொருத்தினால் மண் புரண்டு, மழை பொழியும், நிலமும் சிலிர்த்துப் பிறகு நாற்றும் நிமிர்ந்து வரும்.

2.அவந்தி நாட்டு மன்னன், மருதநாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான்,
அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.

1. அவந்தி நாட்டு மன்னன், மருத நாட்டு மன்னனுடன் போர் புரிந்து நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான்.

2. இது வஞ்சித் திணை ஆகும்.
3. மண்ணாசை கருதிப் போருக்குச் செல்வது வஞ்சித் திணை.

---

3.தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் – இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

<u>தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் – இடம் சுட்டிப் பொருள் விளக்கம்</u>

**இடம்** –

சென்னை பற்றிய தீர்மானமொன்றை முன்மொழிந்து **ம.பொ.சி.** அவர்கள் முழங்கிய வரி இதுவாகும்.

**பொருள் –**

தலையைக் கொடுத்தேனும் (உயிரைக் கொடுத்தேனும்) தலைநகரைக் காப்போம் (சென்னையைக் காப்போம்)

**விளக்கம்** –

என்ன விலை கொடுத்தேனும் சென்னையை நம்மோடு வைத்துக் காக்க வேண்டும் என்ற பொருளில் கூறியது.

---

4.பகர்வனர் திரிதிரு நகரவீதியும்
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்

அ.இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது ?

இவ்வடிகள் இடம் பெற்ற நூல் – **சிலப்பதிகாரம்**.

ஆ.பாடலில் அமைந்த மோனையை எடுத்து எழுதுக.

<u>ப</u>கர்வனர் – <u>ப</u>ட்டினும் <u>க</u>ட்டு – <u>கா</u>ருகர் **<u>தூ</u>**சும் – **<u>து</u>**கிரும்

இ.எதுகைச் சொற்களை அடிக்கோடிடுக.

ப<u>க</u>ர்வனர் – ந<u>க</u>ரவீதியும் ப<u>ட்</u>டினும் – க<u>ட்</u>டு

ஈ.காருகர் – பொருள் தருக.

காருகர் – **நெய்பவர்** (நெசவாளர்)

உ.இப்பாடலில் காணப்படும் நறுமணப் பொருள்கள் யாவை ?

இப்பாடலில் காணப்படும் நறுமணப் பொருள்கள் – **சந்தனம்**, **அகில்**.

---

5.பின்வரும் பத்தியைப் படித்து மையக்கருத்தை எழுதுக.

பேரரசனது மெய்ப் புகழை எடுத்துக் கூறுவது மெய்க்கீர்த்தி. பொதுவாக இது சோழ மன்னருடைய சாசனங்களின் தொடக்கத்தில் அரசனுடைய இத்தனையாவது ஆட்சியாண்டு என்று கூறுமிடத்து அமைக்கப்பெறும். சிறப்பாக அவனுடைய போர் வெற்றிகளையும் வரலாற்றையும் முறையாகக்கூறி, அவன் தன் தேவியோடு வீற்றிருந்து நீடு வாழ்க எனக்கூறி, பிறகே சாசனம் எழுந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடும்.

சோழ மன்னர் பரம்பரையில் மெய்க்கீர்த்தியோடு சாசனங்களைப் பொறிக்கும் வழக்கம் நெடுநாள் இருந்ததில்லை. முதல் இராசராசனுடைய எட்டாம் ஆண்டில் தான் மெய்க்கீர்த்தி காணப்படுகிறது. இதன்கண் வமிச பாரம்பரியம் விதந்து ஓதப்படவில்லை, ஏனைய பகுதிகள் உள்ளன. எனினும் இது மிகவும் சுருக்கமாகவே உள்ளது. இன்னும் பின்வந்த மெய்க்கீர்த்திகளின் வமிச பரம்பரையை மிகவும் விரித்துக் கூறியுள்ளன.

மையக்கருத்து –

மெய்க்கீர்த்தி என்பது மன்னருடைய சாசனங்களில் தொடக்கத்தில் அமைக்கப் பெறும். அவனுடைய போர் வெற்றிகளையும் வரலாற்றையும் முறையாகக் கூறி, சாசனம் எழுந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடும். முதல் இராசராசனுடைய எட்டாம் ஆண்டில் மெய்க்கீர்த்தி காணப்படுகிறது. இது சுருக்கமாகவே உள்ளது.

---

இயல் 8

1.சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

1) பசிப்பிணி மருத்துவம் – பசித்தவருக்கு உணவு தந்து காப்பது இன்றைக்கும் தேவை.
2) வாய்மையே சிறந்த அறம் – உண்மை பேசுவது இன்றைக்கும் தேவை.
3) பேரிடர் காலங்களில் உணவும் உண்மையும் முக்கியத்தேவை.

---

2.ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

**ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் –**

1. அளவடிகளைப் பெற்று வரும்.
2. இயற்சீர் பயின்றுவரும்.
3. மூன்று அடி முதல் எழுதுபவர் மனநிலைக்கு ஏற்ப அடிகள் அமையும்.
4. ஆசிரியத்தளை மிகுதியாக வரும்.
5. ஈற்றடியின் ஈற்றுச்சீர் ஏகாரத்தில் முடித்தல் சிறப்பு.
6. அகவல் ஓசை பெற்று வரும்.

---

3) வாளித் தண்ணீர், சாயக் குவளை, கந்தைத் துணி, கட்டைத் தூரிகை இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.

**வாளியில் தண்ணீர்** எடுத்து வந்து அறைகளைச் சுத்தம் செய்தோம். **குவளையில் சாயம்** கொண்டு வந்து சுவரினை அழகுபடுத்தினோம்.

**கந்தைத்துணியை** எடுத்து வந்து அறைகளில் உள்ள கதவுகளைத் துடைத்தோம். **கட்டைத்தூரிகையை** வைத்து சுவர்களில் உள்ள ஒட்டடைகளை அடித்து சுத்தம் செய்தோம்.

---

இயல் 9

1) "சித்தாளின் மனச்சுமைகள் செங்கற்கள் அறியாது" – இடஞ்சுட்டிப் பொருள் தருக.

இடம்:

இப்பாடல் வரிகள் நாகூர்ரூமியால் எழுதப்பட்ட **'சித்தாளு'** என்ற கவிதையில் அமைந்துள்ளது.

பொருள்:

சித்தாளின் வாழ்வில் உள்ள துயரங்களை, மனச் சுமைகளைத் தலையில் உள்ள செங்கற்கள் அறியாது.

விளக்கம் :

சித்தாளின் மனச்சுமையைச் செங்கற்களும் அறிவதில்லை மனிதர்களும் அறிவதில்லை.

---

2.எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார் ?

1. நான் உயிர் பிழைக்கும் வழி அறியேன்.

2. இவ்வுடலின் தன்மை அறியேன்.
3. உடலுக்கு வேண்டிய உணவைத் தேடிக் கொணரும் வழிவகைகளை அறியேன்.
4. காட்டில் செல்வதற்கான வழிகளையும் அறியேன்.

3.கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.

<u>இலக்கணம் –</u>

இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின்மீது கவிஞர் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது.

தன் + குறிப்பு + ஏற்றம் + அணி – தற்குறிப்பேற்ற அணி.

<u>எடுத்துக்காட்டு –</u>

*போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி*

<u>அணிப்பொருத்தம் –</u>

**கோவலன்** கொலைக்களப்படவிருக்கிறான்.

கொடிகள் கையை அசைத்து "இம்மதுரைக்குள் வரவேண்டா!" என்று தெரிவிப்பதுபோல் உள்ளதெனக் கூறுகிறார் **இளங்கோவடிகள்**. காற்றில் கொடிகள் அசைவது இயற்கை.

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM

**முக்கிய மனப்பாடப்பாடல்கள்**

**<u>அன்னை மொழியே</u>**

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!
தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

– ***பாவலரேறு பெருஞ்சித்திரனார்.***

**<u>முல்லைப்பாட்டு</u>**

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர், தாயர்" என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம். – ***நப்பூதனார்.***

**<u>காசிக்காண்டம்</u>**

விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்

எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே. – ***அதிவீரராம பாண்டியர்.***

---

**<u>பெருமாள் திருமொழி</u>**

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே. – ***குலசேகராழ்வார்.***

---

**<u>நீதிவெண்பா</u>**

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று.

– ***கா.ப.செய்குதம்பிப் பாவலர்.***

---

## அணிகள்

### <u>தீவக அணி</u>

**அணி இலக்கணம்**

**தீவகம் + அணி** **தீவகம் = விளக்கு**

அறையில் ஒரு இடத்தில் வைக்கப்பட்ட விளக்கானது அவ்வறையில் பல இடங்களிலும் உள்ள பொருள்களுக்கு வெளிச்சம் தந்து விளக்குதல் போல செய்யுளில் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் செய்யுளின் பல இடங்களுக்குச் சென்று பொருந்தி பொருளை விளக்குவது தீவக அணி எனப்படும்.

எ.கா– சேந்தன வேந்தன் ...

விளக்கம்–

இப்பாடலில் சேந்தன (சிவந்தன) என்ற சொல் பாடலில் வருகின்ற கண்கள், தோள்கள், திசைகள், அம்புகள், பறவைகள் ஆகிய அனைத்துடன் பொருந்தி பொருள் தருவதால் இப்பாடல் தீவக அணி.

---

### <u>நிரல்நிறை அணி</u>

**அணி இலக்கணம்–**

**நிரல் + நிறை + அணி** **நிரல் = வரிசை ; நிறை = நிறுத்துதல்**

சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல்நிறை அணி எனப்படும்.

எ.கா–

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது –திருவள்ளுவர் (திருக்குறள்).

விளக்கம்–

திருக்குறளில் அன்பும் அறனும், பண்பும் பயனும் என்று சொற்களை முறைப்படி அமைத்து உள்ளமையால் இப்பாடல் நிரல்நிறை அணி.

---

## தன்மையணி

அணி இலக்கணம்

தன்மை + அணி.

எவ்வகைப்பட்ட பொருளாக இருந்தாலும் அதன் இயல்புத் தன்மையோடு அமைத்துப் பாடுவது தன்மையணி ஆகும்.

எ.கா–

மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்... –சிலப்பதிகாரம்.

விளக்கம்–

உடம்பு முழுக்கத் தூசியும் விரிந்து கருமையான தலைமுடியும் கையில் ஒற்றை சிலம்போடு வந்த தோற்றமும் அவளது கண்ணீரும் கண்ட அளவிலே வைகை நதி பாயும் கூடல்நகர் அரசனான பாண்டியன் தோற்றான். அவளது சொல், தன் செவியில் கேட்டவுடன் உயிரை நீத்தான்.

கண்ணகியின் துயர் நிறைந்த தோற்றத்தினை இயல்பாக உரிய சொற்களின் மூலம் கூறியமையால் இப்பாடல் தன்மை அணி.

---

## உவமை அணி

அணி இலக்கணம்–

உவமை + அணி

தெரிந்த ஒரு பொருளைக் கொண்டு தெரியாத ஒரு பொருளை விளக்குவது உவமை எனப்படும். போல, போன்ற உவம உருபுகள் வெளிப்படையாக வந்தால் அது உவமை அணி எனப்படும்.

எ.கா–

வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு. –திருவள்ளுவர் (திருக்குறள்).

விளக்கம்–

ஆட்சி அதிகாரத்தைக் கொண்டுள்ள அரசன் தன் அதிகாரத்தைக் கொண்டு வரி விதிப்பது, வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்வதற்கு நிகரானது.

| | | |
|---|---|---|
| உவமை | – | ஆயுதம் காட்டி வழிப்பறி செய்வது |
| உவமேயம் | – | அரசன் அதிகாரத்தைக் கொண்டு வரி விதிப்பது |
| உவம உருபு | – | போலும் |

இப்பாடலில் போலும் எனும் உவம உருபு உவமைக்கும் உவமேயத்திற்கும் இடையில் வெளிப்படையாக வந்துள்ளதால் இப்பாடல் உவமை அணிக்குப் பொருத்தமாகும்.

---

## வஞ்சப்புகழ்ச்சி அணி

அணி இலக்கணம்

புகழ்வது போலப் பழிப்பதும் பழிப்பது போலப் புகழ்வதும் வஞ்சப்புகழ்ச்சி அணி.

எ.கா–

தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான். –திருக்குறள் (திருவள்ளுவர்)

விளக்கம்–

இதில் நினைத்ததைச் செய்வதில் கயவர்களைத் தேவர்களுக்கு நிகராகக்கூறிப் புகழ்வது போலப் புகழ்ந்து, பின் கயவர்கள் மனம் போன போக்கில் சென்று அழிவர் எனப் பழிப்பதால் வஞ்சப்புகழ்ச்சியணி.

---

## அலகிட்டு வாய்பாடு கூறல்

<u>ஈரசைச்சீர் வாய்பாடு</u>

நேர் நேர் – தேமா
நிரை நேர் – புளிமா
நிரை நிரை – கருவிளம்
நேர் நிரை – கூவிளம்

இவற்றுடன் நேர் சேர காயும், நிரை சேர கனியும் ஆவது மூவசைச்சீர்.

*எ.கா – நேர் நேர் நேர் – தேமாங்காய்.*

<u>ஈற்றுச்சீர் வாய்பாடு</u>

நேர் – நாள்
நேர்பு – காசு (நேர் பிரித்த பிறகும் எழுத்துகள் எஞ்சியிருப்பது)
நிரை – மலர்
நிரைபு – பிறப்பு (நிரை பிரித்த பிறகும் எழுத்துகள் எஞ்சியிருப்பது)

<u>அலகிடுதலுக்கு ஓர் உதாரணம்</u>

அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| அற/னீ/னும் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| இன்/பமும் | நேர் நிரை | கூவிளம் |
| ஈ/னும் | நேர் நேர் | தேமா |
| திற/னறிந்/து | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| தீ/தின்/றி | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| வந்/த | நேர் நேர் | தேமா |
| பொருள் | நிரை | மலர் |

இக்குறளின் இறுதிச்சீர் மலர் எனும் வாய்பாட்டுடன் முடிந்துள்ளது.

---

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM

## <u>செய்யுள் நெடுவினா</u>

1.மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

மனோன்மணியம் சுந்தரனாரின் வாழ்த்து

- கடல் எனும் ஆடை உடுத்திய நில மகள்
- நிலமகளுக்கு முகம் பாரத கண்டம்

- நெற்றியில் மனம் வீசும் திலகம் தமிழ்நாடு
- எல்லாத் திசைகளிலும் நில மகளாகிய உன் புகழ்

பெருஞ்சித்திரனார் வாழ்த்து

- மண்ணுலகப் பேரரசி
- பழமைக்கு பழமையாய் தோன்றிய நறுங்கனி
- சங்க இலக்கியங்கள் அணிகலன்கள்
- பாண்டிய மன்னனின் மகள்

---

2.முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகள்

- திருமாலின் பேருருவம் போல் மழை மேகம் உயர்ந்து நின்றது.
- மழை மேகம் மலையைச் சூழ்ந்து வேகத்துடன் பெருமழை பொழிகிறது
- கடவுளை வணங்கி நற்சொல் கேட்டு நின்றனர்
- பசியால் வாடிய இளம் கன்றுக்கு இடை மகள் நற்சொல் கூறினார்
- நின் தலைவன் விரைவில் வருவான் மனத் தடுமாற்றம் கொள்ளாதே என ஆற்றுப்படுத்தினர் முதுபெண்டிர்.

---

3. ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.

அன்றைய நிலை

அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை என்கிறது குறள்.

கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதல் ஆற்றுப்படை.

கூத்தனை நெறிப்படுத்துவதாக அமைந்தது அன்று.

இன்றைய நிலை

இன்று நோய் குணமாக, மாணவர்கள் கல்வி கற்க, அரசு உதவிகள் பெற, ஒரு வழிகாட்டுதலாக மாறி உள்ளது.

வழிகாட்டுதலில் தன்னார்வ நிறுவனங்களின் பங்கு சிறப்பிற்குரியது.

இன்றைய இணைய வழி வழிகாட்டுதல் எல்லாம் பணம் வரும் நோக்கமாக மாறி வருகிறது.

---

4. இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

- மன்னன் இடைக்காடனார் புலவரின் பாடலை இகழ்ந்தார்.
- மனம் வருந்திய இடைக்காடனார் இறைவனிடம் முறையிட்டார்.
- இறைவனும் லிங்க வடிவத்தை மறைத்து உமாதேவியோடு வைகை ஆற்றில் தென்புறத்தை அடைந்தார்.
- மன்னன் இறைவன் நீங்கியதைக் கண்டு தன் பிழையைப் பொறுத்தருள வேண்டினார்.
- புலவர்க்குச் சிறப்பு செய்து மன்னிப்பு கேட்டார்.

5. பாடப் பகுதியில் இடம் பெற்றுள்ள மெய்க்கீர்த்திப் பாடலில் நயத்தை விளக்குக.

இரண்டாம் இராஜராஜ சோழனின் சிறப்பான ஆட்சி, நீதி நெறி கூறப்பட்டுள்ளது.

எதுகை மோனை இயைபு நயம் பயின்று வருதலால் சந்த நயம் மிகுந்துள்ளது.

முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை

**மா**வே – **மா**மலரே

இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை

ப**டி**யானை – வ**டி**மணிச்சிலம்பு

முரண்பட்ட சொற்கள் அமைவது முரண் தொடை

**செல்** ஓடை – **வரு**புனல்

பாடலில் இறுதி எழுத்தோ அசையோ இயைந்து வருவது இயைபு நயம்

சிறைப்**படுவன** – வடுப்**படுவன**

மெய்க்கீர்த்தி பாடலில் உயர்வு நவிற்சி அணி பயின்று வந்துள்ளது

---

6.சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

<u>சிலப்பதிகார மருவூர்ப்பாக்கம் வணிக வீதி</u>

தானியக் கடைத்தெருக்கள்

நேரடி வணிகம்

கலப்படம் இல்லாதது

மனிதநேயம் மிக்கது

தரம் உண்டு விலை குறைவு

<u>இக்கால வணிக வளாகங்கள்</u>

தனித்தனி அங்காடிகள்

இடைத்தரகர்கள் அதிகம்

கலப்படம் கலந்துள்ளது

வணிக நோக்கம் உடையது

விலை அதிகம் தரமற்றதாக இருக்கும்

---

7. கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

<u>வீரமாமுனிவரின் கவிதாஞ்சலி</u>

பூமித்தாயே என் அன்னையின் உடலைக் காப்பாயாக.

கருணையன், அன்னை உடல் மீது மலரையும் கண்ணீரையும் கொட்டினான்.

கருணையன் மனம், பறிக்கப்பட்ட மலர் போல உள்ளது.

அம்பினால் உண்டான வலி போல் உள்ளது.

பசிக்கான வழி தெரியாது கருணையனைத் தவிக்கவிட்டுச் சென்றார்.

இவனது இரங்கல் கண்டு இயற்கை கண்ணீர் சிந்தியது.

## கடிதங்கள்

1.மாநில அளவில் நடைபெற்ற *மரம் இயற்கையின் வரம்* எனும் தலைப்பிலான கட்டுரைப்போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

<u>வாழ்த்து மடல்</u>

7, பாரதியார் தெரு,
மதுரை.
03–07–2022.

அன்புள்ள நண்பா,

நானும் என் பெற்றோரும் இங்கே நலமாக இருக்கிறோம். அதுபோல் அங்கு நீயும் உன் பெற்றோரும் நலமாக இருக்கிறீர்களா ? நான் இங்கு நன்றாகப் படிக்கிறேன். நீயும் அங்கு நன்றாகப் படிப்பாய் என்று எண்ணுகிறேன்.

மாநில அளவில் நடைபெற்ற " *மரம் இயற்கையின் வரம்* " என்ற தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று நீ முதல் பரிசு பெற்றாய் என்ற செய்தியை நாளிதழ் மூலம் அறிந்து கொண்டேன். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

மாநில அளவில் முதல் பரிசு பெற்றுள்ளதற்கு என்னுடைய பாராட்டுகள்.

உன் பதில் மடலைக் காண ஆவலோடு காத்திருக்கிறேன். மீண்டும் என் பாராட்டுகள் தோழா.

இப்படிக்கு,

உன் அன்புள்ள தோழன்,
செ.பாலமுருகன்.

உறை மேல் முகவரி –

திரு.மு.முத்துமுருகன்,
5, கம்பர் தெரு,
சென்னை.

---

2.உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலைகூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

<u>புகார்க் கடிதம்</u>

அனுப்புநர்

அ.கபிலன்,
5, அண்ணா தெரு,
மதுரை.

பெறுநர்

உணவுப் பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,
உணவுப் பாதுகாப்புத் துறை,
மதுரை.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் – உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருப்பது குறித்து நடவடிக்கை எடுப்பது சார்பாக...

வணக்கம். நேற்று மாலை நான் மதுரையில் உள்ள குறிஞ்சி உணவு விடுதியில் உணவு உண்டேன். அங்கு வழங்கப்பட்ட உணவு தரமற்றதாக இருந்தது. பழைய எண்ணெய் பயன்படுத்தப்பட்டு இருந்தது. விலையும் மிக அதிகமாக இருந்தது.

தரமற்ற அந்த உணவினை படம் எடுத்து வைத்துள்ளேன். விடுதியின் பற்றுச்சீட்டு என்னிடம் உள்ளது. அதன் நகலை இணைத்துள்ளேன். தாங்கள் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மிக்க நன்றி.

நாள் – 10–07–22 இப்படிக்கு,

இடம் – மதுரை தங்கள் உண்மையுள்ள,

அ.கபிலன்.

இணைப்பு –

பற்றுச்சீட்டு நகல்,

புகைப்படங்கள்.

உறை மேல் முகவரி –

உணவுப் பாதுகாப்பு ஆணையர்,

உணவுப் பாதுகாப்புத் துறை,

மதுரை.

---

3.நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் *உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்* என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

<u>நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம்</u>

அனுப்புநர்

பா.அன்பு,

5, வள்ளுவர் தெரு,

சென்னை.

பெறுநர்

ஆசிரியர்,

தினச்சுடர் நாளிதழ்,

சென்னை.

மதிப்பிற்குரிய அய்யா,

பொருள் – பொங்கல் மலரில் கட்டுரை வெளியிடுதல் சார்பாக...

வணக்கம். தங்கள் நாளிதழில் பொங்கல் மலருக்குக் கட்டுரைகள் வரவேற்கப்படும் என்ற செய்தியினைப் படித்தேன்.

உழவர்களின் பெருமையையும் உழவுத் தொழிலுக்கு நாம் செய்யவேண்டிய மரியாதையையும் தொகுத்து **உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்** என்ற தலைப்பில் கட்டுரையை உருவாக்கியுள்ளேன். தங்கள் நாளிதழின் பொங்கல் மலரில் இக்கட்டுரையை வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இக்கடிதத்துடன் என் கட்டுரையை இணைத்துள்ளேன்.

நன்றி.

இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள,

பா.அன்பு.

இடம் – சென்னை,

நாள் – 08.11.2022.

உறைமேல் முகவரி

பெறுநர்

ஆசிரியர்,

தினச்சுடர் நாளிதழ்,

சென்னை – 8.

---

4.உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்துசெல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

<u>மின்வாரிய அலுவலருக்குக் கடிதம்</u>

அனுப்புநர்

கா.பாரதி,

3, காமராசர் நகர்,

மதுரை.

பெறுநர்

மின்வாரிய அலுவலர்,

மின்வாரிய அலுவலகம்,

மதுரை.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் – பழுதடைந்துள்ள மின்விளக்குகளைச் சரி செய்வது தொடர்பாக...

வணக்கம். நான் மதுரையில் உள்ள காமராசர் நகரில் வசித்து வருகிறேன். கடந்த சில நாட்களாக எங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன.

அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வது மிகவும் சிரமமாக உள்ளது. திருடர்கள் பயமும் அதிகரித்துள்ளது.

சாலை மேடு பள்ளமாக இருப்பதால் அடிக்கடி விபத்து நடக்கிறது. மாணவர்கள், நோயாளிகள், முதியோர் மிகவும் சிரமப்படுகிறார்கள்.

எனவே எங்கள் தெருவில் பழுதடைந்துள்ள மின்விளக்குகளை விரைவில் சரி செய்து தருமாறு பொதுமக்கள் சார்பாக மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள,

கா.பாரதி.

இடம் – மதுரை,

நாள் – 11–12–2022.

உறைமேல் முகவரி

பெறுநர்

மின்வாரிய அலுவலர்,

மின்வாரிய அலுவலகம்,

மதுரை.

---

## படிவங்கள்

### 1.நூலக உறுப்பினர் படிவம்

**விருதுநகர்** மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் – **அழகாபுரி ஊர்ப்புற நூலகம்**

உறுப்பினர் சேர்க்கை அட்டை

அட்டை எண் : ........ உறுப்பினர் எண் ; ...........

| | | |
|---|---|---|
| 1. பெயர் | : | த. அன்பு |
| 2. தந்தை பெயர் | : | தமிழரசன் |
| 3. பிறந்த தேதி | : | 25.2.2001 |
| 4. வயது | : | 21 |
| 5. படிப்பு | : | பத்தாம் வகுப்பு |
| 6. தொலைபேசி எண் | : | 9876543210 |
| 7. முகவரி | | 1/3, அண்ணா சாலை, பாரதி நகர், |
| (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) | : | விருதுநகர் – 626001 |

நான் ஊர்ப்புற நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ 50 சந்தா தொகை ரூ 100 ஆக மொத்தம் ரூ 150 ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன் .

இடம் : விருதுநகர், தங்கள் உண்மையுள்ள,

நாள்: 13 – 07 – 2022 த.அன்பு.

திரு / திருமதி / செல்வி / செல்வன் த.அன்பு அவர்களை எனக்கு நன்கு தெரியும் என சான்று அளிக்கிறேன்.

பிணைப்பாளர் கையொப்பம்

அலுவலக முத்திரை ( பதவி மற்றும் அலுவலகம் )

மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள், சட்டமன்ற /நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி /மாநகராட்சி /ஒன்றிய / பேரூராட்சிஉறுப்பினர்கள்)

---

### 2.மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பம்

சேர்க்கை எண் : ....... தேதி : 13. 06.2021 வகுப்பும் பிரிவும்: 11 – அ

| | | |
|---|---|---|
| 1. மாணவ/ மாணவியின் பெயர் | : | க. மதன் |
| 2. பிறந்த தேதி | : | 16.07.2005 |
| 3. தேசிய இனம் | : | இந்தியன் |
| 4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் | : | கண்ணன் – ராதா |
| 5. வீட்டுமுகவரி | : | 25, கம்பர் தெரு, விருதுநகர். |
| 6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு | : | பத்தாம் வகுப்பு |
| 7. பயின்ற மொழி | : | தமிழ் |
| 8. பெற்ற மதிப்பெண்கள் | : | 487/ 500 |
| 9. இறுதியாக படித்த பள்ளியின் முகவரி | : | அரசு உயர்நிலைப் பள்ளி, விருதுநகர். |

| தேர்வின் பெயர் | பதிவு எண் – ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| *பொதுத்தேர்வு* | *102534 2022* | *தமிழ்* | *95* |
| | | *ஆங்கிலம்* | *95* |
| | | *கணிதம்* | *99* |
| | | *அறிவியல்* | *99* |
| | | *சமூகஅறிவியல்* | *99* |
| | | ***மொத்தம்*** | ***487*** |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம்

11.தாய்மொழி : தமிழ்

12.சேர விரும்பும் பாடப் பிரிவும் பயிற்று மொழியும் : கணிப்பொறியியல் /தமிழ்

க.மதன்

மாணவ / மாணவியின் கையெழுத்து

---

3.தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவம்

1. மாணவரின் பெயர் – செ.பானுமதி
2. பாலினம் – பெண்
3. பிறந்த தேதி – 03–02–2004
4. தேசிய இனம் – இந்தியன்
5. பெற்றோர்/பாதுகாவலர் பெயர் – க.செல்வம்
6. இரத்த வகை – 0+
7. உயரம் , எடை – 120செமீ 43 கிகி
8. வீட்டு முகவரி – 7, பாரதி தெரு, மதுரை.
9. தொலைபேசி/அலைபேசி எண் – 9876543210
10. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு – பத்தாம் வகுப்பு
11. பள்ளியின் முகவரி – அரசு மேனிலைப்பள்ளி, சிம்மக்கல், மதுரை.
12. சேர விரும்பும் விளையாட்டு – பூப்பந்து

சேர்க்கை எண் – மாணவரின் கையெழுத்து

செ.பானுமதி

தேதி – 07–05–2022

இடம் – மதுரை

பெற்றோர்/பாதுகாவலரின் கையெழுத்து

---

4.பணி வாய்ப்பு வேண்டி தன் விவரப் பட்டியல் நிரப்புதல்

1. பெயர் – செ.கபிலன்
2. பாலினம் – ஆண்
3. பிறந்த நாள், வயது – 03–02–2001, 21
4. தேசிய இனம் – இந்தியன்
5. பெற்றோர்/பாதுகாவலர் பெயர் – க.செல்வம்
6. வீட்டு முகவரி – 7, பாரதி தெரு, மதுரை.

| | | |
|---|---|---|
| 7. | தொலைபேசி/அலைபேசி எண் | – 9876543210 |
| 8. | பத்தாம் வகுப்பில்பெற்ற மதிப்பெண்கள் | – 480 |
| 9. | தாய்மொழி | – தமிழ் |
| 10. | பயின்ற மொழிகள் | – தமிழ், ஆங்கிலம் |
| 11. | தட்டச்சு | – தமிழ், ஆங்கிலம் |
| 12. | கணினி | – ஜாவா |

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உண்மையென உறுதி கூறுகிறேன். தங்கள் நிறுவனத்தில் இளநிலை உதவியாளர் பணியினைத் தந்தால் என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதியளிக்கிறேன்.

இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள,

செ.கபிலன்.

தேதி – 07–05–2022

இடம் – மதுரை

---

## நிற்க அதற்குத் தக...

**இயல் 1** பக்க எண் 24

இதில் நீங்கள் செல்லும் வழி யாது? உங்கள் நண்பருக்குக் காட்டும் வழி யாது?

நாங்கள் செல்லும் வழி இன்சொல் வழி.

எங்கள் நண்பருக்குக் காட்டும் வழி இன்சொல் வழி.

---

**இயல் 2** பக்க எண் 48

புயலின் அறிவிப்பைக் கேட்ட என் செயல்கள்–

புயலின்போது வெளியே செல்ல மாட்டேன்.

குடும்பத்தினரையும் வெளியே செல்ல வேண்டாம் என்று கூறுவேன்.

தொலைபேசி, மின்சாதனங்கள் பயன்படுத்துவதைத் தவிர்ப்பேன்.

குடும்பத்தினர் மாடியில் இருப்பதைத் தவிர்த்து தளப்பகுதியிலேயே தங்குமாறு கூறுவேன்.

வானொலி அறிவிப்பைக் கேட்டு அதனைப் பின்பற்றுவேன்.

---

**இயல் 3** பக்க எண் 69

மருத்துவர் கு.சிவராமன் கருத்திற்கு சமூக அக்கறையுடனான பதில் –

ஆரோக்கியம் தரும் இயற்கை உணவை மட்டுமே உண்ண வேண்டும்.

உடல் நலத்தைக் கெடுக்கும் துரித உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.

உணவே மருந்து என்பதை உணர வேண்டும்.

---

**இயல் 4** பக்க எண் 98

நாங்கள் செய்யும் முயற்சிகள்

1 உடல்நலம் பாதிக்கும் என்பதை எடுத்துக்கூறுவேன்.

2 மனநலம் பாதிக்கும் என்பதை எடுத்துக்கூறுவேன்.

3 புத்தக வாசிப்பை அறிமுகம் செய்வேன்

4 மைதான விளையாட்டுகளை அறிமுகம் செய்வேன்

---

**இயல் 5** பக்க எண் 126

| *பள்ளியில் நான்* | *வீட்டில் நான்* |
| --- | --- |
| நேரத்தைச் சரியாகக் கடைப்பிடிப்பேன் | வீட்டுப் பணிகளைப் பகிர்ந்து செய்வேன் |
| உடன் பயிலும் மாணவரின் திறமையைப் பாராட்டுவேன் | அம்மா கூறும் வேலைகளைச் செய்வேன் |
| ஆசிரியர்களுக்கு மரியாதை செலுத்துவேன் | பெற்றோருக்கு மரியாதை தருவேன் |
| நண்பர்களுடன் அன்பாகப் பழகுவேன் | தம்பி தங்கைகளுடன் அன்பாக இருப்பேன் |

**இயல் 6** பக்க எண் 153

கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் மேன்மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்யவிருப்பனவற்றை வரிசைப்படுத்துக.

1.பிறந்தநாள் விழாக்களில் மயிலாட்டம் முதலான கலைகளை நிகழ்த்த முனைவேன்.

2.எங்கள் குடும்ப விழாக்களில் பொம்மலாட்டம் நிகழ்த்த ஏற்பாடு செய்வேன்.

3.பள்ளி விழாக்களில் ஒயிலாட்டம் முதலான கலைகளை நிகழ்த்த முனைவேன்.

4.ஊர்த் திருவிழாக்களில் பொய்க்கால் குதிரையாட்டம், கரகாட்டம் போன்றவற்றை நிகழ்த்த ஏற்பாடு செய்வேன்.

5.விழாக்காலங்களில் நிகழ் கலைகளை நிகழ்த்துவதற்கு அனைவரிடமும் விழிப்புணர்வு ஏற்படுத்துவேன்.

**இயல் 7** பக்க எண் 182

கல்வெட்டுகளைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் உங்களால் இயன்ற செயல்கள் –

| | |
| --- | --- |
| கல்வெட்டுகளின் வழி அறியலாகும் செய்திகளை என் நண்பர்களுக்குக் கூறுவேன். | அவற்றின் மதிப்பைக் குறைக்கும்படி எதுவும் கூற அனுமதிக்க மாட்டேன். |
| கல்வெட்டுகள் குறித்து அவர்களைப் பெருமிதம் அடையச் செய்வேன். | கல்வெட்டுகளைச் சேதப்படுத்த அனுமதிக்க மாட்டேன். |
| கல்வெட்டுகள் கூறும் மன்னர்களின் வரலாற்றை அறியச் செய்வேன். | கல்வெட்டுகளின் முக்கியத்துவத்தை அனைவருக்கும் உணர்த்துவேன். |

**இயல் 8** பக்க எண் 201

மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களும் அதனால் ஏற்படும் நன்மைகளும்...

| நாம் செய்ய வேண்டுவன | அறங்கள் தரும் நன்மைகள் |
| --- | --- |
| நல்ல சொற்களையே தேர்ந்தெடுத்துப் பேசுதல். | நல்ல நண்பர்களைப் பெறலாம், எதிரிகளையும் நண்பராக்கலாம். |
| ஒருவரைப்பற்றி இன்னொருவரிடம் மாற்றிப் பேசாதிருத்தல். | வீண் விவாதங்களைத் தவிர்க்கலாம். |
| பழிவாங்கும் எண்ணத்தைக் கைவிடல். | பகைவர்களையும் நண்பராக்கலாம். |
| உதவி செய்தல். | புதிய நண்பர்களைப் பெறலாம். |

**இயல் 9** பக்க எண் 229

நீங்கள் செய்த, பார்த்த உதவிகளால் எய்திய மனநிலை...

| உதவி | மனநிலை |
|---|---|
| வகுப்பறையில் எழுதுகோல் கொடுத்து உதவிய போது | இக்கட்டான சூழலில் செய்த உதவியால் எனக்கு மனநிறைவு அவருக்கு மன மகிழ்ச்சி |
| உறவினருக்கு என் அம்மா பணம் அளித்து உதவிய போது | கல்லூரிப் படிப்பைத் தொடர முடிந்ததால் உறவினருக்கு ஏற்பட்ட நன்றியுணர்வு |
| பசியோடு இருந்த முதியவருக்கு உணவு வழங்கிய போது | முதியவரின் மனநிறைவும் மகிழ்ச்சியும் |

## மொழிபெயர்ப்பு

**இயல் 1**

If you talk to a man in language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart. –Nelson Mandela

**நீ ஒருவனிடம் அவனுக்குப் புரிந்த மொழியில் பேசினால் அது அவன் மூளைக்குச் செல்லும், நீ அவனிடம் அவனின் தாய்மொழியில் பேசினால் அது அவனின் இதயத்தை அடையும் – நெல்சன் மண்டேலா**

Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going. – Rita Mae Brown.

**மொழி ஒரு கலாச்சாரத்தின் வழிகாட்டி. அது மக்கள் எங்கிருந்து வருகிறார்கள், எங்கே போய்க்கொண்டிருக்கிறார்கள் என்பதை உனக்கு அறிவிக்கும். – ரீட்டா மே பிரௌன்**

**இயல் 2**

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colorful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

**பொன்னிறச் சூரியன் அதிகாலையிலேயே எழுந்து ஒளிமிக்க கதிர்களால் இருளை மங்கச் செய்கிறது. பால்போன்ற வெண்மேகங்கள் அலைகளாகத் தவழ்கின்றன. வண்ணமயமான பறவைகள் தங்களது காலைப்பொழுதை இசை, தாளத்துடன் தொடங்குகின்றன. அழகான பட்டாம்பூச்சிகள் மலர்களைச் சுற்றி நடனமாடுகின்றன. பூக்களின் மணம் தென்றலை நிரப்புகின்றன. காற்று மெதுவாக எல்லா இடங்களிலும் வீசி எங்கும் இனிமையான நறுமணம் பரப்பும்.**

**இயல் 5**

Lute music – **யாழிசை**
Chamber– **ஏதென்று**
To lookup– **பார்த்தேன்**
Grand–daughter – **பேத்தி**
Rote– **நெட்டுரு**
Didactic compilation– **நீதி நூல் திரட்டு**

**இயல் 7** Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was fit for cultivation, as it had the most fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.

**சங்ககாலத்தில் தமிழ்நாட்டின் நிலஅமைப்பு ஐந்து புவியியல் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவற்றுள் மருதம் என்பதே நல்ல பண்பட்ட, தகுதி வாய்ந்த நாகரிகமாக இருந்தது. ஏனெனில் அது வளமிக்க நிலங்களைக் கொண்டிருந்தது. உழவர்களின் சொத்து என்பது தேவையான சூரிய ஒளி, பருவ மழை, மண்ணின் வளம் ஆகியவற்றைச் சார்ந்தே உள்ளது. இத்தகைய இயற்கைக் கூறுகளின் மத்தியில் சூரிய ஒளி பழங்காலத் தமிழர்களால் தவிர்க்கமுடியாததாகக் கருதப்பட்டது.**

---

**இயல் 9**

1. Education is what remains after one has forgotten what one has learned in School. – Albert Einstein
2. Tomorrow is often the busiest day of the week. –Spanish Proverb
3. It is during our darkest moments that we must focus to see the light. – Aristotle
4. Success is not final; failure is not fatal. It is the courage to continue that counts. – Winston Churchill.

**1.பள்ளியில் பயின்றதை மறந்த பிறகு மீதமுள்ளதே கல்வி – ஆல்பட் ஐன்ஸ்டீன்**

**2.நாளை தான் ஒவ்வொரு வாரத்தின் சுறுசுறுப்பான நாள். – ஸ்பானியப் பழமொழி**

**3.நம் வாழ்வின் இருண்ட காலத்தில்தான் நாம் ஒளியைக் காண ஒருமுகமாகக் கவனம் செலுத்த வேண்டும். – அரிஸ்டாடில்**

**4.வெற்றி முடிவும் அல்ல, தோல்வி அழிவும் அல்ல, தொடர்ந்து நம்பிக்கையுடன் செயலாற்றுவதே முக்கியமான ஒன்று. – வின்ஸ்டன் சர்ச்சில்.**

---

## நெடுவினா – 8 மதிப்பெண்கள்

1.தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

- தமிழ் மொழி திராவிட மொழிகளிலும் சொல் வளத்திலும் சிறந்தது.
- தமிழ் மொழியால் நாட்டின் வளத்தையும் நாகரீகத்தையும் அறியலாம்.
- புதிய தமிழ்ச் சொல்லாக்கம் தமிழ் மொழியை அழியாமல் பாதுகாக்கிறது.
- தாவரங்களின் அடி, கிளை, இலை, கொழுந்து, பூ, பிஞ்சு, குலை, காய் வகை, தோல்வகை, அடிவகை மற்றும் இளம் பயிர் வகைகள் உள்ளன.
- தாவரத்தின் அனைத்து நிலைகளுக்கும் தமிழில் சொற்கள் உண்டு.
- பல ஆங்கிலச் சொற்களைத் தமிழோடு இணைத்து பேசவும் எழுதவும் செய்வதைத் தவிர்க்க புதிய சொல்லாக்கம் தேவை.
- தொழில்நுட்பம் சார்ந்த பல சொற்களை தமிழில் பயன்படுத்த சொல்லாக்கம் தேவை.

---

2.மலர்ந்தும் மலராத பாதி மலர் போல
வளரும் விழி வண்ணமே– வந்து
விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக

விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்த இளம் தென்றலே– வளர்
பொதிகை மலை தோன்றி மதுரை நகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே.

–கவிஞர் கண்ணதாசனின் இந்தப் பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரை செய்க.

- பாதி மலர் போல் வரும் மெல்லிய காற்று.
- காலைப் பொழுதில் குளிர் காற்று.
- மெல்ல நடந்து வரும் இளம் தென்றல்.
- தமிழ் போல் சிறப்புடன் வாழ்வாயாக.
- அந்திப் பொழுதின் கலை வண்ணம் அழகிற்கு உவமை.
- மோனை எதுகை இயைபு நயங்கள் மிகுந்து வந்துள்ளதால் சந்த நயமிக்கதாக உள்ளது.
- மலர்ந்தும் மலராத விடிந்தும் விடியாத என்ற முரண் நயங்கள் அமைந்துள்ளன.
- காற்றோடு தமிழைச் சிறப்பித்துள்ளதால் நல்ல பொருள் நயம் உடையதாக உள்ளது.
- கவிஞர் கண்ணதாசனின் இந்த பாடல் இயற்கை எழிலுடன் உவமித்துப் பாடியுள்ளதால் உவமையணி இடம் பெற்றுள்ளது.

---

3.உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

- என் இல்லத்திற்கு வந்த மாமாவை மகிழ்ச்சியாக வரவேற்றேன்.
- அவர் அமர்வதற்கு இடம் அளித்தேன்.
- மாமாவிற்கு முதலில் நீர் மோர் குடிக்க கொடுத்தேன்.
- மாமா குடும்பத்தார் பற்றி நலம் விசாரித்தேன்.
- அவருக்கு விருந்து படைத்தேன்.
- பின்பு மாமாவுடன் சிறப்புமிக்க இடங்களுக்குச் சென்று வந்தேன்.
- நகர்வலம் முடித்து மதிய உணவை இருவரும் சேர்ந்து உண்டோம்.
- வெற்றிலை பாக்கு எடுத்துக் கொடுத்தேன்.
- வாசல் வரை வந்து வழி அனுப்பி வைத்தேன்.

---

4.ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த தேநீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துகளை ஒட்டி செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

முன்னுரை

உலகை உள்ளங்கையில் கொண்டு வந்து விட்டோம் இன்று. இயந்திரங்களாய் மனிதர்கள் ஆகிவிட்டார்கள்.

வாழ்க்கையில் ஓர் அங்கம

திறன்பேசி இல்லாத வீடுகளே இன்று இல்லை. 85 வகையான செயல்பாடுகளை ஒரு கருவி செய்கிறது. வங்கி, மருத்துவம், பொறியியல், வணிகம் என கணினி இல்லாத துறைகளே இல்லை.

செயற்கை நுண்ணறிவு

தானியங்கிகள் செயற்கை நுண்ணறிவுடன் வெளி வருகின்றன. நாளைய உலகம் செயற்கை நுண்ணறிவின் கைகளில் தான் உள்ளது. விண்வெளி ஆய்வு, கடலுக்கடியில் ஆய்வு, பனிக்கண்டத்தில் ஆய்வு எல்லாம் இதனால் முடியும்.

தொழில் நுட்பப் புரட்சி

நேரலைக் கல்வி, இணையவழிக் கல்வி இன்று நடைபெறுகிறது. மின்னணு பணப் பரிமாற்றம், இணையத்தள வணிகம் இவற்றால் தொழில் புரட்சி ஏற்பட்டுள்ளது.

முடிவுரை

மனித எந்திரங்கள், நுண்ணறிவுக் கருவிகள் பொருத்தப்பட்ட பின் ஒரு குழந்தையைத் தூக்கவும் தேநீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் வடிவமைக்கப்படும்.

5.தமிழின் இலக்கிய வளம் –கல்வி மொழி –பிற மொழிகளில் உள்ள இலக்கியங்கள் – அறிவியல் கருத்துக்கள்– பிறதுறைக் கருத்துகள்– தமிழுக்குச் செழுமை.

மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.

தமிழின் இலக்கிய வளம்

இலக்கிய வளம் சிறக்க பிற மொழி நூல்களை தமிழில் மொழிபெயர்க்க வேண்டும்.

கல்வி மொழி

மொழிபெயர்ப்பைக் கல்வி மொழியாக ஆக்குவதன் மூலம் பிற மொழிகளின் சிறப்புகளைத் தமிழ் மொழியிலும் அறிந்து கொள்ள முடிகிறது.

இலக்கிய வளங்கள்

புதிய படைப்புகளை உருவாக்க மொழிபெயர்ப்பு உதவுகிறது.

அறிவியல் கருத்து

tele என்பது தொலை. இதன் அடிப்படையில் Telescope, Telephone தொலைநோக்கி தொலைபேசி என்று மொழிபெயர்க்கப்பட்டவை அறிவியல் சார்ந்த கருத்தாகும்.

பிறதுறைக் கருத்துகள்


கல்வி, மருத்துவம் முதலான பிற துறைகள் மொழிபெயர்ப்பால் வளர்ச்சி அடைந்துள்ளன.

தமிழுக்குச் செழுமை

தேமதுரத் தமிழ் எங்கும் பரவ வேண்டும். அதற்கு மொழிபெயர்ப்பு அவசியம் வேண்டும்.

---

6. ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை, வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.




WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM

---

7.சான்றோர் வளர்த்த தமிழ் – கட்டுரை

*முன்னுரை*

முச்சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தவர்கள் நாம். சான்றோர் வளர்த்த தமிழ் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

*வள்ளுவரும் ஔவையாரும்*

உலகப் பொதுமறை திருக்குறளைத் தந்தார் வள்ளுவர். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை எழுதினார் ஔவையார். பெண்பாற் புலவர்களும் சங்கத் தமிழ் இலக்கியங்கள் படைத்தனர்.

*இலக்கியத்தில் தமிழ்*

அகநானூறு புறநானூறு நூல்கள் மூலம் தமிழர் பண்பாட்டை அறியலாம். பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் அற நூல்கள் ஆகும்.

*சிற்றிலக்கியத்தில் தமிழ்*

பரணி, கலம்பகம், பிள்ளைத்தமிழ் போன்ற 96 வகைச் சிற்றிலக்கியங்களைப் படைத்தனர் தமிழ்ப் புலவர்கள்.

*பிற நாட்டார்*

இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்குகிறான் என்று தன் நினைவிடத்தில் எழுதச் சொன்னார் ஜி.யு.போப். வீரமாமுனிவர் தமிழில் பல நூல்கள் எழுதியுள்ளார்.

*மொழிப் பற்றாளர்*

உ.வே.சாமிநாதர் தேவநேயப் பாவாணர், பாரதியார், பாரதிதாசன், சுரதா வழிவந்த கவிஞர்கள் தமிழை உயிராய் மதித்துப் போற்றினர்.

*முடிவுரை*

கம்பர், இளங்கோவடிகள், நக்கீரர் என தமிழ் வளர்த்த சான்றோர் பலர் ஆவர்.

---

8.விண்வெளியும் கல்பனா சாவ்லாவும் – கட்டுரை

முன்னுரை

பெண்கள் நாட்டின் கண்கள். கல்பனா சாவ்லா நம் மனதில் நீங்கா இடம் பிடித்தவர்.

இளமையும் கல்வியும்

பனாரஸ் லால் சாவ்லா – சன் யோகிதா தேவி ஆகியோரின் மகளாகப் பிறந்தார் கல்பனா. கர்னல், சண்டிகரில் அவர் கல்வி கற்றார். விண்வெளிப் பொறியியல் முதுகலைப் பட்டத்தை அமெரிக்காவில் பெற்றார்.

முதல் விண்வெளிப் பயணம்

1995 ஆம் ஆண்டு பயிற்சிகள் முடித்து 1997 ஆம் ஆண்டு முதலில் பயணம் மேற்கொண்டார்.

இறுதிப்பயணம்

கொலம்பியா விண்கலத்தில் 2000 ஆம் ஆண்டு விண்வெளி வீரர்களுடன் பயணம் செய்தார். இதுவே இவரின் இறுதிப் பயணம் ஆகும்.

முடிவுரை

ராகேஷ் சர்மாவிற்கு அடுத்து விண்வெளி சென்ற முதல் இந்தியப் பெண் என்ற பெருமை பெற்றார். அனைவரின் உள்ளத்திலும் நட்சத்திரமாய் ஒளிர்கிறார் கல்பனா சாவ்லா.

---

9.அரசுப் பொருட்காட்சி – கட்டுரை

முன்னுரை

அனைவரின் மனதையும் கவர்ந்த ஒரு இடம் பொருட்காட்சியாகும் அங்கு சென்று வந்த அனுபவத்தைப் பற்றி கட்டுரையில் காண்போம்.

பொருட்காட்சியின் நோக்கம்

மதுரையில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்தேன். அங்கு பல்வேறு விதமான அரங்குகள் மூலம் மக்களுக்குச் செய்திகளைக் கூறும் இடமாக உள்ளது. மக்களின் பொழுதுபோக்கு இடமாக விளங்குகிறது.

இடமும் அமைப்பும்

மதுரை மாநகரத்தின் மையப்பகுதியான தமுக்கம் என்ற மிகப்பெரிய திடலில் அமைக்கப்பட்டிருந்தது.

நன்மைகள்

பல்வேறு பொருட்களை ஒரே இடத்தில் காணலாம், கண்டு களிக்கலாம். பொருட்களை மக்களிடம் நேரடியாக விற்கலாம். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை மகிழ்ச்சியுடன் பயனடையவர்.

முடிவுரை

மண் பரிசோதனை, இயற்கை விவசாயம், உணவு, சுகாதாரம், சுற்றுலா வழிகாட்டி, பெண்களுக்கான அரசு நிதி உதவி ஆகியவற்றைப் பற்றி அறிய பொருட்காட்சி உதவுகிறது.

---

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM

10.நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு – குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும் என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

- ○ நாடும் மொழியும் நமது இரு கண்கள்.
- ○ குடியரசு தின விழா, சுதந்திர தின விழா, காந்தி ஜெயந்தி போன்றவை நாட்டு விழாக்கள்.
- ○ 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள் நமது நாடு விடுதலை பெற்றது.
- ○ இந்த விடுதலை சும்மா கிடைத்தது இல்லை.
- ○ எண்ணற்ற தியாகிகளின் உடல், பொருள், ஆவி என அனைத்தையும் விலையாகக் கொடுத்து பெற்றது.
- ○ திருப்பூர்க் குமரன், பகத்சிங், திலகர், கோகலே, கட்டபொம்மன், நேதாஜி, பூலித்தேவன், வ.உ.சி, காந்தி, நேரு, வேலுநாச்சியார் போன்ற பலர் நாட்டுக்காக உழைத்த நல்லோர்.
- ○ மாணவர்கள் என்றும் நாட்டுப் பற்று கொண்டவர்களாக இருக்க வேண்டும்.
- ○ இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்கள்.
- ○ நல்லறிவு, நற்பண்பு, நல்லொழுக்கம், நல்ல குடிமக்கள் என்ற பெயரை மாணவர்கள் எடுக்க வேண்டும்.

---

11. "கற்கை நன்றே கற்கை நன்றே

பிச்சை புகினும் கற்கை நன்றே", என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடம் இருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

- மேரி ஜேனின் அம்மா பாட்ஸி; அப்பா சாம்.
- பருத்திக்காட்டு வேலை மேரிக்கு மிகவும் பிடிக்கும்.
- வெள்ளை முதலாளி வீட்டுக்கு ஒரு நாள் சென்றாள் மேரி.
- புத்தகம் ஒன்றை எடுத்துப் புரட்டத் துவங்கிய போது *புத்தகத்தை என்னிடம் கொடு இதை நீ எடுக்கக் கூடாது உன்னால் படிக்க முடியாது* என்று பிடுங்கிக் கொண்டாள் வெள்ளைக்காரச் சிறுமி.
- கண்ணீருடன் வெளியேறிய மேரி நான் படிக்க வேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்தாள்.
- மிஸ் வில்சன் அவளுக்கு உதவினார்.
- மேயெஸ்வில்லியில் உள்ள பள்ளியில் படிப்பதற்காக தந்தை சாம் சிலேட்டும் சாக்பீஸ் துண்டுகளும் வாங்கித் தந்தார்.
- மேரி தினமும் ஐந்து மைல்கள் நடந்து சென்று படித்துவிட்டு திரும்புவாள்.
- உயர்படிப்புக்கு ஒரு வெள்ளைக்காரப் பெண்மணி பணம் அனுப்பியதாக மிஸ் வில்சன் கூறினார்.
- அக்கம்பக்கத்து வீட்டாருடன் பெற்றோரும் வந்து ரயில் நிலையத்தில் கௌரவத்திற்குரிய சிறுமியான மேரியை மேலும் கற்பதற்கு வழி அனுப்பினர்.

---

12. நிகழ் கலை வடிவங்கள் – அவை நிகழும் இடங்கள் – அவற்றின் ஒப்பனைகள் – சிறப்பும் பழைமையும் – இத்தகைய மக்கள் கலைகள் அருகி வருவதற்கான காரணங்கள் –அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன – இவை குறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக.

சமூக பண்பாட்டுத்தளத்தின் கருத்து கருவூலம் நிகழ் கலைகள்.

பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றை அறிவதற்கு தற்காலத்தில் நிகழ்த்தப்படும் நிகழ்வுகலையே சான்று.

உண்மைக் கலைஞன் முழு ஈடுபாட்டைக் காட்டுவான்.

கோவில் திருவிழாக்கள் மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் நிகழ்கலைகள் நிகழ்த்தப்படும்.

தெருக்கூத்துக் கலைகளில் தெய்வங்கள், மன்னர்கள் போன்ற பல்வேறு விதமான ஒப்பனைகளைக் காணலாம். கையுறைக் கூத்து, தெருக்கூத்து போன்றவை பழமை வாய்ந்த கலைகள்.

நாகரிக வளர்ச்சி, போதிய வருமானம் இன்மை, திரைத்துறை வளர்ச்சி, அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி ஆகிய காரணங்களால் நிகழ்கலைகள் அருகி வருகின்றன.

நம் இல்ல நிகழ்ச்சிகளிலும் ஊர்த் திருவிழாக்களிலும் மற்றும் ஊடகங்களில் விளம்பரப்படுத்தியும் இக்கலையைக் காக்கலாம்.

---

13.மங்கையராய்ப் பிறப்பதற்கே

மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா என்ற வரிகளுக்கு ஏற்ப பல சாதனைகள் புரிந்த பெண்கள் பலர்.

இசைப் பேரரசி, தாய் வீணைக் கலைஞர், திருப்பதியில் ஒலிக்கப்படும் வெங்கடேச சுப்ரபாதம், காற்றில் வரும் கீதமாகத் திகழ்கிறார் மதுரை சண்முக வடிவு சுப்புலட்சுமி.

நம் நாட்டின் நாட்டுப்பண்ணுக்கு நடனமாடியவர், பரதநாட்டியத்திற்கு உலகளாவிய புகழைப் பெற்றவர், ஆன்மீகப் பட்டறிவை நடனத்தால் அளித்தவர் பால சரஸ்வதி.

சமூகச் சிக்கல்களைக் களப்பணியாற்றி கதையாக எழுதியவர், பல புதினங்களை எழுதியவர், பல்வேறு விருதுகளும் பெற்றவர் ராஜம் கிருஷ்ணன்.

காந்தி சிந்தனைவாதி, பூதான இயக்கத்தில் பணிபுரிந்தவர், உழுபவர்க்கே நிலம் உரிமை இயக்கம் தொடங்கியவர் கிருஷ்ணம்மாள் ஜெகநாதன்.

படிப்பறிவு இல்லாமல் பட்டறிவால் கற்றவர், பெண்கள் குழு மூலம் சமூக முன்னேற்றத்திற்கு வித்திட்டவர், வயதான மற்றும் மாற்றுத்திறனாளிகளின் குடும்பத்திற்கு உதவி புரிந்தவர், பெண் ஆற்றல் விருது பெற்றவர் மதுரை சின்னப்பிள்ளை.

---

14 இராமானுஜர் நாடகம்

தலைமுறைக்கு ஒரு முறை மட்டுமே வளரும் மூங்கில் போல பிறந்த ஞானி இராமானுஜர்.

திருமந்திரத் திருவருள் பெற தண்டும் கொடியுமாக முதலியாண்டான், இராமானுஜர், கூரேசர் ஆகிய மூவரும் பூரணர் இல்லத்திற்குச் சென்றனர்.

மூவரையும் கண்ட பூரணர் கோபம் கொண்டார்.
தங்கள் விருப்பப்படியே வந்துள்ளேன், தண்டு கொடிக்கு இணையானவர்கள் இவர்கள், திருவருள் புரிக என்றார்.
பூரணர் இராமானுஜருக்குத் திருமந்திரத்தைக் கூறினார்.
பிறருக்குக் கூறினால் நரகமே கிட்டும் என்றார்.
இராமானுஜர் திருமந்திரத்தை பொதுமக்களுக்கு உரத்த குரலில் கூறி மக்களையும் கூறச் சொன்னார்.
பூரணர், குருவிற்கு நம்பிக்கைக் கேடு செய்து விட்டீர்கள், இதனால் நரகமே கிட்டும் என்றார்.
இச்செயலால் நான் மட்டுமே நரகம் சேர்வேன், ஆனால் மக்கள் அனைவரும் வீடு பேறு அடைவர் என்றார்.
இராமானுஜரின் பதிலைக் கேட்ட பூரணர் மகிழ்வுடன் இந்த எண்ணம் எனக்குத் தோன்றவில்லையே எனக் கூறித் தன் மகனை இராமானுஜரிடம் அடைக்கலமாக அளித்தார்.
யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பது போல வாழ்ந்த இராமானுஜரின் வாழ்வு அளப்பரியது.

---

**15.ஒருவன் இருக்கிறான்** சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர்

- கரிசல் எழுத்தாளர்கள் வரிசையில் மூத்தவர் கு.அழகிரிசாமி.
- அவர் எழுதிய ஒருவன் இருக்கிறான் என்ற சிறுகதையில் ஆறுமுகம் மற்றும் வீரப்பன் மனிதத்தை வெளிப்படுத்துகிறார்கள்.
- தங்கவேலுவின் மனைவிக்கு அக்கா மகன்தான் குப்புசாமி.
- தாய்மாமன் வீட்டில் காஞ்சிபுரத்தில் இருந்தான் குப்புசாமி.
- வயிற்று வலி காரணமாக தற்போது சித்தியின் வீட்டில் தஞ்சம் அடைந்திருக்கிறான்.
- காஞ்சிபுரத்திலிருந்து வீரப்பன் மூன்று ரூபாய் பணம் கொடுத்து அனுப்பினான்.
- அதைக் கொண்டு வந்த ஆறுமுகம் தன் பங்கிற்கு ஒரு ரூபாயும் இரண்டு சாத்துக்குடிப் பழங்களும் கொடுத்தான்.
- முகமறியாத ஆறுமுகம், வீரப்பன் ஆகியோர் உதவுகிறார்கள்.
- உறவுகளோ தோற்றம் கண்டு குப்புசாமியை வெறுத்து ஒதுக்குகிறார்கள்.

---

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM